தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வரிகள் இல்லாத உபரி பட்ஜெட்



முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து வாழ்த்து பெற்ற பிறகு, வரும் நிதியாண்டுக்கான (2014-15) நிதி நிலை அறிக்கையை வியாழக்கிழமை தாக்கல் செய்ய பேரவைக்குள் வரும் நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம். உடன் நிதித் துறை முதன்மைச் செயலர் க.சண்முகம்.

தமிழ்நாடு அரசு 2014-15-ம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வியாழக்கிழமை சட்டப்பேரவையில் தாக்கல் செய்தது. மாநில நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்துள்ள இந்த பட்ஜெட்டில் புதிய வரிகள் ஏதும் விதிக்கப்படவில்லை. எனினும் உபரி வருவாயாக ரூ.289 கோடி கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வரும் நிதியாண்டில் (2014-15) வருவாய் இனங்கள் மூலம் ரூ.1,27,389 கோடி கிடைக்கும் எனவும், செலவினங்கள் ரூ.1,27,100 கோடியாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், வருவாய் உபரி ரூ.289 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அம்மா உணவகம், அம்மா குடிநீர்த் திட்டங்களைத் தொடர்ந்து, மருந்துகளை குறைந்த விலையில் விற்க, புதிதாக 100 அம்மா மருந்தகங்கள் தொடங்கப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.1,593 கோடியில் பசுமை மின்தடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் நிதிநிலைமை கடினமாக இருந்தாலும் மானியம் மற்றும் உதவித்தொகைகளுக்காக ரூ.49,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

2 ஆயிரம் பொது சேவை மையங்கள்: தமிழகத்தில் கூடுதலாக 2 ஆயிரம் பொதுச் சேவை மையங்கள் தனியார்-பொது பங்களிப்பு முறையில் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். மேலும், சென்னையில் சொத்துவரி, மின் கட்டணம், குடிநீர் உள்பட பல்வேறு வரிகளை ஒரே இடத்தில் செலுத்துவதற்கு 200 பொதுச்சேவை மையங்கள் தொடங்கப்படும். இந்தத் திட்டம் மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

கூவம் நதியை சீரமைத்து மீட்டெடுப்பதற்காக ரூ.3 ஆயிரத்து 833 கோடியில் பெரும் திட்டம் செயல்படுத்தப்படும். மாநிலத்துக்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த ரூ.119.98 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மழைக்காலத்தில் பராமரிப்புத் தொகையாக ரூ.4 ஆயிரம் அளிக்கப்பட உள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை ரூ.ஆயிரத்தில் இருந்து ரூ.1,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழகம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வறட்சியைச் சந்தித்து வரும் நிலையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும், கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கவும் ரூ.681 கோடி அளவிலான நிவாரணத் தொகுப்பு வழங்கப்படும்.

பருத்தி உற்பத்தியில் கவனம் செலுத்தும் வகையில் ரூ.50 கோடி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் என்ற பெருந்திட்டம் தொடங்கப்படும். முன் எப்போதும் இல்லாத வகையில், கூட்டுறவு அமைப்புகளுக்கான பயிர்க் கடன் இலக்கு ரூ.5 ஆயிரம் கோடியாக உயர்த்தப்படும்.

**கால்நடை காப்பீட்டுத் திட்டம்:** கால்நடைக் காப்பீட்டுத் திட்டத்தை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் வரும் நிதியாண்டில் விரிவுபடுத்துவதற்கும் தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாநிலத்தில் ரூ.200 கோடியில் பழைய பஸ்கள் மாற்றப்பட்டு ஆயிரம் புதிய பஸ்கள் வாங்கப்படும். மேலும், போக்குவரத்துத் துறைக்கு டீசல் மானியமாக ரூ.500 கோடி அளிக்கப்படும். சென்னை மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் வகையில் புதிய நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்புச் செயல்படுத்தப்படும்.

சென்னை நகரில் மோனோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். நகர்ப்புறங்களில் வீடுகளற்ற ஆதரவற்றோருக்கு 62 புதிய காப்பகங்கள் ஏற்படுத்தப்படும்.

மாநகர பஸ்களின் போக்குவரத்துத் திறனை உயர்த்தும் வகையில், பஸ்களில் ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தப்படும். இளைஞர்களின் திறனை மேம்படுத்த ஒரகடத்தில் அமைக்கப்பட்டுள்ளது போன்று, திருநெல்வேலி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் தனியாக திறன் மேம்பாட்டு மையங்கள் நிறுவப்படும். மாநிலத்தில் சென்னை உள்பட 11 இடங்களில் புதிதாக 1,747 குடியிருப்புகள் கட்டப்படும்.

மருத்துவத் துறைக்கு ஊக்கம்: ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒரு நடமாடும் மருத்துவக் குழு வீதம், 770 மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்படும். தஞ்சாவூர், திருநெல்வேலியில் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனைகள் அமைக்கப்படும்.

இலவசத் திட்டங்களுக்கு நிதி: வரும் நிதியாண்டில் 12 ஆயிரம் பேருக்கு இலவச கறவை மாடுகள் அளிக்க ரூ.43.65 கோடியும், 1.5 லட்சம் பேருக்கு வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்துக்காக ரூ.198.25 கோடியும் தாலிக்கு தங்கம் மற்றும் உதவித் தொகை வழங்குவதற்காக ரூ.751 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 35 லட்சம் பேருக்கு இலவச மின்விசிறி, கிரைண்டர் மற்றும் மிக்ஸி வழங்குவதற்காக ரூ.2 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பிளஸ் 2 மற்றும் பாலிடெக்னிக் மாணவர்கள் 5.5 லட்சம் பேருக்கு லேப்டாப் வழங்க ரூ.1,100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வரும் நிதியாண்டில் 60 ஆயிரம் பேருக்கு பசுமை வீடுகள் கட்டுவதற்காக ரூ.1,260 கோடி நிதி ஒதுக்கப்படும். உணவுத் துறையில் இலவச அரிசி, சிறப்பு பொது விநியோகத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்த வரும் நிதியாண்டில் ரூ.5,300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று தனது உரையில் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.இப்போதுள்ள கடினமான நிதிச் சூழலில் அனைவரின் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யும் வகையில் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறப்பு அம்சங்கள்

குடிநீர்த் தட்டுப்பாடு, கால்நடை தீவனத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க ரூ.681 கோடி நிவாரணத் தொகுப்பு.தமிழகம் முழுவதும் 2 ஆயிரம் பொதுச் சேவை மையங்கள்.கூவம் நதியை சீரமைக்க ரூ.3,833 கோடியில் திட்டம்.ரூ.200 கோடியில் ஆயிரம் புதிய பஸ்கள்.சாலை மேம்பாட்டுக்கு ரூ.2,800 கோடி மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு ரூ.4 ஆயிரம் பராமரிப்பு உதவித் தொகை. தஞ்சை, திருநெல்வேலியில் ரூ.300 கோடியில் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனைகள். மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை ரூ.1,500 ஆக உயர்வு. இலவச மிக்ஸி, மின்விசிறி, கிரைண்டர் வழங்க ரூ.2,000 கோடி. 4,827 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு லேப்-டாப். ரூ.50 கோடியில் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம்.கூட்டுறவு பயிர்க் கடன் இலக்கு ரூ.5000 கோடி. ஐ.டி. தொழில் முனைவோருக்காக தொழில்நுட்பப் பூங்காக்களில் தனியாக இடம் ஒதுக்கப்படும்

ரூ.1,100 கோடியில் 5.5 லட்சம் மாணவர்களுக்கு இலவச லேப்-டாப். குடிநீர்த் தட்டுப்பாடு, கால்நடை தீவனத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க ரூ.681 கோடி நிவாரணத் தொகுப்பு. தமிழகம் முழுவதும் 2 ஆயிரம் பொதுச் சேவை மையங்கள். கூவம் நதியை சீரமைக்க ரூ.3,833 கோடியில் திட்டம்.

ரூ.200 கோடியில் ஆயிரம் புதிய பஸ்கள். சாலை மேம்பாட்டுக்கு ரூ.2,800 கோடி

மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு ரூ.4 ஆயிரம் பராமரிப்பு உதவித் தொகை.

தஞ்சை, திருநெல்வேலியில் ரூ.300 கோடியில் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனைகள். மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை ரூ.1,500 ஆக உயர்வு. இலவச மிக்ஸி, மின்விசிறி, கிரைண்டர் வழங்க ரூ.2,000 கோடி. 4,827 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு லேப்-டாப். ரூ.50 கோடியில் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம். கூட்டுறவு பயிர்க் கடன் இலக்கு ரூ.5000 கோடி. ஐ.டி. தொழில் முனைவோருக்காக தொழில்நுட்பப் பூங்காக்களில் தனியாக இடம் ஒதுக்கப்படும் ரூ.1,100 கோடியில் 5.5 லட்சம் மாணவர்களுக்கு இலவச லேப்-டாப்.

மானியங்களுக்கான நிதி ஒதுக்கீடு

பொது விநியோகத் திட்ட உணவு மானியமாக ரூ.5,300 கோடி

மின் மானியமாக ரூ.5,400 கோடி

முதல்வரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துக்காக ரூ.757 கோடி

இலவச வேட்டிச் சேலை திட்டத்துக்கு ரூ.499 கோடி

துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு:

பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.17,731 கோடி

சுகாதாரத் துறைக்கு ரூ.7,005 கோடி

காவல் துறைக்கு ரூ.5,186 கோடி

உயர் கல்வித் துறைக்கு ரூ.3,627 கோடி

நெடுஞ்சாலைத் துறைக்கு ரூ.2,800 கோடி

**கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.80 கோடியில் 227 புதிய கட்டடங்கள்**

**சென்னை,**

நபார்டு வங்கி நிதி உதவியுடன் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு புதிதாக 227 கட்டடங்கள் கட்டப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

சட்டப்பேரவையில் வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையில்(பட்ஜெட்) இதுகுறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பு:

வரும் நிதியாண்டில் பின் தங்கிய மாவட்டங்களில் உள்ள 100 கால்நடை துணை மையங்கள் மருந்தகங்களாக தரம் உயர்த்தப்படும். நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.80.05 கோடி செலவில் 227 புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**அணைகள் புனரமைப்பு, மேம்பாட்டுக்கு ரூ.329 கோடி நிதி ஒதுக்கீடு**

**சென்னை,**

அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ.329.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

சட்டப்பேரவையில் வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையில் இது குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பு:

உலக வங்கியின் நிதி உதவியோடு ரூ.745.59 கோடியில் அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.நான்கு கட்டங்களாக 104 அணைகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென உலக வங்கியோடு திட்ட ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு ஒரு திட்ட மேலாண்மை அலகு நிறுவப்பட்டுள்ளது.இந்தத் திட்டத்தில் இது வரை 28 அணைகளில் பணிகளை மேற்கொள்வதற்கான நீரியல் ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் இத்திட்டத்துக்கென ரூ.329.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

### நெல் அரவை ஆலைகள் நவீனமயமாக்க ரூ.36 கோடி ஒதுக்கீடு



**சென்னை,**

ஒன்பது நெல் அரவை ஆலைகள் ரூ.36 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

சட்டப்பேரவையில் வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையில்(பட்ஜெட்) இதுகுறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பு:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 23 நெல் அரவை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 14 ஆலைகள் ரூ.58.86 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

வரும் 2014-2015 ஆம் நிதியாண்டில் மீதமுள்ள 9 நெல் அரவை ஆலைகள் ரூ.36 கோடியில் நவீனப்படுத்தப்படும்.

### ரூ. 5 ஆயிரம் கோடி பயிர்க் கடன் இலக்கு

**சென்னை,**

கூட்டுறவு அமைப்புகளின் மூலம் வழங்கப்படும் பயிர்க் கடன் இலக்கு ரூ. 5 ஆயிரம் கோடியாக அதிகரிக்கப்படும் என்று தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் (2014-2015) கூறப்பட்டுள்ளது.அதன் விவரம்: 2013-14-ஆம் நிதியாண்டில் கூட்டுறவு அமைப்புகள் மூலம் பயிர்க் கடன் வழங்குவதற்கான இலக்கு ரூ. 4,500 கோடி என நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இதுவரை 8.9 லட்சம் விவசாயிகளுக்கு ரூ. 3,948 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2014-15-ஆம் ஆண்டில் இந்த அமைப்புகளுக்கான பயிர்க் கடன் இலக்கு ரூ. 5 ஆயிரம் கோடியாக உயர்த்தப்படும். பயிர்க் கடனை குறிப்பிட்ட காலத்துக்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குவதற்கான முழு வட்டிச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வட்டிச் சலுகைக்காக ரூ. 200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பயிர்க் காப்பீட்டுக்காக ரூ. 242.54 கோடி: இதுவரை செயல்படுத்தப்பட்டு வந்த தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்துக்குப் பதிலாக, மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தையோ பருவ நிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தையோ செயல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதனால் விவசாயிகள் அதிக காப்பீட்டுத் தொகையைச் செலுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

விவசாயிகளின் இந்தக் கூடுதல் சுமையைக் குறைக்கும் வகையில் கூடுதல் காப்பீட்டுத் தொகையை மத்திய - மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ள வேண்டுமென தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது. 2014-15-ஆம் ஆண்டு பட்ஜெட்டில், பயிர்க் காப்பீட்டுக்காக ரூ. 242.54 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நுண்ணீர்ப் பாசனத்தில் 1.30 லட்சம் ஏக்கர்: நுண்ணீர்ப் பாசனத்துக்கு தமிழக அரசு ஊக்கம் அளித்து வருகிறது. நீர்வள நிலவளத் திட்டம், தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றுடன் மாநில அரசு நிதியையும் ஒருங்கிணைத்து, 3 ஆண்டுகளில் சுமார் 3 லட்சம் ஏக்கர் பரப்பளவு நுண்ணீர்ப் பாசனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

2014-15-ஆம் ஆண்டில் பல்வேறு திட்ட நிதிகளையும் ஒருங்கிணைத்து ரூ. 400 கோடியில் 1.30 லட்சம் ஏக்கர் பரப்பளவு நுண்ணீர்ப் பாசனத்தின் கீழ் கொண்டுவரப்படும். மேலும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 323 கோடியில் துணைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.குடிநீர், தீவனத்

தட்டுப்பாட்டை சமாளிக்க ரூ. 681 கோடி: குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும், கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கவும் ரூ. 681 கோடி அளவிலான நிவாரணத் தொகுப்பை அரசு வழங்கும். இதில் ரூ. 189 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்தும், ரூ. 492 கோடி உள்ளாட்சி அமைப்புகளின் நிதியில் இருந்தும், செயல்முறைகளில் உள்ள திட்டங்களில் இருந்தும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தப்படும்.

**பருத்தி சாகுபடி இயக்கம் தொடக்கம்**

பருத்தி உற்பத்தியை உயர்த்த தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழகத்தில் 3.34 லட்சம் ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுமார் 4 லட்சம் பருத்தி பேல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் தமிழகத்தில் உள்ள 1,948 நூற்பாலைகளுக்கு ஆண்டுதோறும் 110 லட்சம் பருத்தி பேல்கள் தேவைப்படுகின்றன.

பருத்தி உற்பத்தி போதிய அளவில் இல்லாத காரணத்தால் ரூ. 50 கோடி தொடக்க ஒதுக்கீட்டுடன் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் என்ற திட்டம் தொடங்கப்படும். மத்திய அரசின் பருத்தி தொழில்நுட்ப இயக்கத்தில் உள்ள நிதியும் இந்த மாநில இயக்கத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

2014-15-ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 3.70 லட்சம் ஏக்கரை பருத்தி சாகுபடியின் கீழ் கொண்டு வரவும், 5 ஆண்டுகளில் இதை 6 லட்சம் ஏக்கராக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் 2014-15-ஆம் ஆண்டில் வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்துக்கு ரூ. 100 கோடி செலவிடப்படும் எனவும், 22 மாவட்டங்களில் ரூ. 115 கோடியில் தேசியத் தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்படும் எனவும் பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இணைய நில ஆவண மேலாண்மைத் திட்டம்: மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் உள்ள பல்வேறு பிரிவுகள்

கணினிமயமாக்கப்படும். மேலும் இணைய நில ஆவண மேலாண்மைத் திட்டம் என்ற புதிய திட்டம் தொடங்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தின் சிறப்புத் தேவைகளை நிறைவு செய்ய உதகமண்டலத்தைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வருவாய்க் கோட்டம் ஒன்று உருவாக்கப்படும்.

மேலும் கடற்கரை இயற்கைச் சீற்ற ஆபத்து குறைப்புத் திட்டத்தை செயல்படுத்த ரூ. 106.29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டுக்கு ரூ.100 கோடி**

**சென்னை,**

சென்னையில் ஆண்டுதோறும் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்த ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் (2014-2015) தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம்: தமிழகத்தில் தொழில் வளத்தையும் கட்டமைப்பையும் மேலும் ஊக்குவிக்க  வரும் அக்டோபர் மாதத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்தும். இதற்காக இந்த வரவு - செலவு திட்டத்தில் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான சிறப்பு சலுகைத் தொகுப்பு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் மாவட்டங்களுக்கு: இந்தப் பெருந் திட்டத்தின் ஒரு பகுதியாக, மாநிலம் முழுவதும் உள்ள 53 ஆயிரம் ஏக்கர் நிலம் மேம்படுத்தப்படும். இதில் மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அறிவிக்கப்படும்.

ஏற்கெனவே விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ள மதுரை - தூத்துக்குடி தொழில் மேம்பாட்டு வழித்தடத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக சிறப்பு செயலாக்க முகமை ஒன்று ஏற்படுத்தப்படும்.

2 புதிய திறன் மேம்பாட்டு மையங்கள்: இளைஞர்களின் திறனை மேம்படுத்த காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் திறன் மேம்பாட்டு மையம் ஒன்றை சிப்காட் நிறுவனம் அமைத்துள்ளது.

மேலும் திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானிலும், திருவள்ளூர் மாவட்டம் தேர்வாய்கண்டிகையிலும், இதுபோன்ற இரண்டு மையங்கள் அமைக்கப்படும்.

மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்குத் தேவையான திறன் மிக்க மனித ஆற்றலை வழங்க உதவுவதுடன், நமது இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திடவும் இம்முயற்சி வழி வகுக்கும்.

## ஆவினில் பால்கொள்முதல் 15 ஆயிரம் லிட்டர் குறைவு கோல்டு ரக பாக்கெட் விற்பனை நிறுத்தம்

**மதுரை,**

மதுரை ஆவினில் பால்கொள்முதல் 15 ஆயிரம் லிட்டர்  குறைந்துவிட்டதால், கோல்டு ரக பால்பாக்கெட் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது.

மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மதுரை ஆவினுக்கு பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இரு மாவட்டங்களிலும் 1500-க்கும் மேற்பட்ட சங்கங்கள் மதுரை ஆவினுக்கு பால் வழங்கி வருகின்றன. சராசரியாக நாளொன்றுக்கு 1.80 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படும். இதில் பெரும்பகுதி பால் பாக்கெட்டுகளுக்கும், நாளொன்றுக்கு 2 ஆயிரம் டன் அளவுக்கு தயிர், நெய், பால்கோவா போன்ற இதர பொருள்கள் தயாரிப்புக்கும் பயன்படுத்தப்படும்.

பசும்பால் (ஆரஞ்சு), நிலைப்படுத்தப்பட்ட பால் (பச்சை), கோல்டு (இளம்சிவப்பு) ஆகிய மூன்று ரகங்களில் ஆவின் பால் பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில் பசும்பால், நிலைப்படுத்தப்பட்ட பால் ஆகியன வீட்டு உபயோகத்துக்கு பயன்படுத்தக்கூடியவை. கோல்டு ரக பாக்கெட்டுகள்

டீக்கடை, ஹோட்டல் உள்ளிட்ட வணிக ரீதியிலான பயன்பாட்டுக்கு வாங்கப்படுகின்றன.

இந்நிலையில், தற்போது மதுரை ஆவினில் கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு நாளொன்றுக்கு 15 ஆயிரம் லிட்டர் குறைந்து, 1.65 லட்சம் லிட்டர் மட்டுமே கிடைக்கிறது. இதனால் கோல்டு ரக பாக்கெட்டுகள் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக, பசும்பால் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், தயிர், நெய், பால்கோவா போன்ற இதர பொருள்களின் உற்பத்தியும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக பிப்ரவரி, மார்ச் மாதங்களில், பசுக்களிடம் இருந்து குறைந்த அளவுக்கே பால் கிடைக்கும். ஒவ்வோர் ஆண்டும் இந்த காலகட்டத்தில் பால்கொள்முதல் சற்று குறையும். தமிழகம் முழுவதும் இதேநிலை இருக்கிறது. இருப்பினும் மதுரை ஆவினில் கடந்த ஆண்டில் இதேகாலத்தில் 1.69 லட்சம் லிட்டர் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் அதைக்காட்டிலும் 4 ஆயிரம் லிட்டர் குறைந்திருக்கிறது. மார்ச்சுக்குப் பிறகு இந்த நிலைமை சீராகும். இருப்பினும் வீட்டு உபயோகத்துக்கான பால் பாக்கெட்டுகள் விற்பனையில் எவ்விதப் பாதிப்பும் இருக்காது என்று ஆவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மேம்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்:பிரீமியம் செலுத்த பிப்.28 கடைசி திண்டுக்கல்,

மேம்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெற பிப்ரவரி 28ஆம் தேதிக்குள் (வெள்ளிக்கிழமை) விவசாயிகள் பதிவு செய்யவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள வேளாண் பயிர்களான கரும்பு, வாழை, உளுந்து, பாசி பயறு, நிலக்கடலை, மக்காச்சோளம், நெல், எள் மற்றும் தோட்டக் கலைப் பயிர்களான மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குக்கும் காப்பீடு செய்யலாம். வங்கிக் கடன் பெறாத விவசாயிகள் குறிப்பிட்ட பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு செலுத்த வேண்டிய பிரிமீயம் தொகை

மற்றும் காப்பீட்டுத் தொகை குறித்து, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ந. சம்பத்குமார் தெரிவித்துள்ளது: (அடைப்புக் குறிக்குள் காப்பீட்டுத் தொகை)

வாழைக்கு ரூ. 7055 (ரூ.2.35 லட்சம்), உளுந்து ரூ. 129 (ரூ.2142), பாசிப் பயறு ரூ. 238 (ரூ.4198), நிலக்கடலை ரூ. 1230 (ரூ.35705), மக்காச்சோளம் ரூ. 451(ரூ.6050), நெல் ரூ. 320 (ரூ.16006), எள் ரூ. 248 (ரூ.4959), கரும்பு ரூ. 1827(ரூ.64333), மிளகாய் ரூ. 1148 (ரூ.25022), வெங்காயம் ரூ. 853 (ரூ.28421), உருளை ரூ. 1498 (ரூ.61388) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விருப்பமுள்ள விவசாயிகள், தங்களின் புகைப்படம், நிலத்துக்குரிய சிட்டா அடங்கல், வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றுடன், அந்தந்தப் பகுதியில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன்பெறலாம்.

மேலும், மேம்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வுக் கூட்டமும் நடத்தப்படுகிறது. பிப்ரவரி 14 முதல் 18ஆம் தேதி வரை 5 நாள்கள் 38 இடங்களில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு, வேளாண்மைத் துறையும், காப்பீட்டு நிறுவனமும் ஏற்பாடு செய்துள்ளன என்றார்.

**கொடைக்கானலில் அதிக விலைக்கு முள்ளங்கி விற்பனை: விவசாயிகள் மகிழ்ச்சி**

**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் அதிக விலைக்கு முள்ளங்கி விற்பனையாவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் செண்பகனூர், வில்பட்டி, பள்ளங்கி, குறிஞ்சி நகர், மாட்டுப்பட்டி, அட்டுவம்பட்டி, பிரகாசபுரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் முள்ளங்கி விளைவிக்கப்படுகிறது.

முள்ளங்கி எந்தப் பருவத்திலும் விளையக்கூடியது. மேலும், இதற்கு குறைந்த அளவு பராமரிப்பும், போதுமான அளவு தண்ணீரும் இருந்தாலே நன்கு விளைச்சல் தரக்கூடியது. ஆனால், விலை குறைவாகச் செல்வதால், அவற்றை பயிரிடுவதில் விவசாயிகள் அதிக அளவில் ஆர்வம் காட்டுவதில்லை.முள்ளங்கியில் வெள்ளை,

சிவப்பு வகைகள் உள்ளன. வெள்ளை முள்ளங்கி மருத்துவ குணமுடையது. இதை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர்.

கொடைக்கானல் பகுதிகளில் கடந்த 3 மாதங்களாக பருவமழை இல்லாததால், விவசாயப் பயிர்களான கேரட், உருளை, பட்டர் பீன்ஸ், பீட்ரூட் போன்ற காய்கறிகளில் ஊடு பயிராகவும், பல இடங்களில் தனிப்பட்ட முறையிலும் சாகுபடி செய்யப்பட்ட முள்ளங்கி, தற்போது நல்ல விளைச்சல் தந்துள்ளது. மேலும், நல்ல விலைக்கும் செல்வதால், விவசாயிகள் மகிழ்ந்துள்ளனர்.

இது குறித்து, விவசாயிகள் கூறுகையில், ஊடு பயிராக பயிரிடப்பட்ட முள்ளங்கி நல்ல விளைச்சல் தந்துள்ளது. எனவே, கிலோ ரூ. 10 முதல் ரூ. 12 வரை நல்ல விளைக்கும் செல்கிறது. இதனால், விவசாயிகள் சந்தோஷமடைந்துள்ளனர்.

இதுபோன்று, விவசாய நிலங்களில் ஊடு பயிராக பயிரிடுவதற்கு, சோளம், நூக்கல், பட்டர் புரூட், பேஷன் புரூட் போன்றவற்றை சாகுபடி செய்வதற்கு ஆலோசனைகள் வழங்க வேண்டும். அப்போதுதான், பழம் மற்றும் காய்கறி வகைகளை அதிக அளவில் விளைச்சல் செய்யமுடியும் என்றனர்.

**திருவாடானை ஒன்றியத்துக்கு 15 ஆழ்துளை கிணறுகள்**

**திருவாடானை,**

திருவாடானை ஒன்றியத்தில் வரும் கோடைகாலத்தில் வறட்சியை சமாளிக்க மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் 15ஆழ்துளை கிணறு அமைக்கப்படவுள்ளதாக ஒன்றியக் குழு தலைவர் முனியம்மாள் ராஜேந்திரன் தெரிவித்தார்.

திருவாடானை ஒன்றியத்தில் நடப்பு சம்பா பருவத்தில் பருவ மழை பொய்த்து கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் எதிர்வரும் கோடைகாலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டு குடி தண்ணீர் பிரச்னை ஏற்படும். மேலும் கால்நடைகளுக்கும் தீவனம், தண்ணீர் தட்டுபாடு நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை சமாளிக்க முன்னேற்பாடாக இந்த ஒன்றியத்தில் மாவட்ட ஆட்சியர் நந்தகுமார்

உத்தரவின்பேரில் ஆள்குழாய் கிணறு அமைக்கப்படவுள்ளது. ஆள்துளை கிணறுகள் அமைக்கப்படும் பகுதிகள் மற்றும் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரம்:

காடாங்குடி ரூ. 14 லட்சம், கோடனூர் ரூ. 14 லட்சம், கல்லூர் ரூ. 14 லட்சம், சி கே மங்கலம் ரூ. 14 லட்சம், ஓரிக்கோட்டை நாமோ திட்டம் ரூ. 5 லட்சம் மற்றும் ரூ.10 லட்சம், சினேகவள்ளிபுரம் ரூ. 14 லட்சம், துத்தாகுடி ரூ. 14 லட்சம், நெய்வயல் 2 ஆழ்துணை கிணறு ரூ. 14 லட்சம், சிருமலைக்கோட்டை ரூ. 6 லட்சம், பனஞ்சாயல் ரூ. 6 லட்சம், நகரிகாத்தான் ரூ. 6 லட்சம், பழங்குளம் ரூ. 6 லட்சம், கருமொழி ரூ. 14 லட்சம், பி கே மங்கலம் ரூ. 14 லட்சம் ஆகிய கிராமங்களுக்கு 15 ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி தற்போது போர்க்கால அடிப்படையில் நடந்து வருகிறது. இதன்மூலம் திருவாடானை ஒன்றியம் தண்ணீர் பிரச்னை தீர்ந்து தன்னிறைவு பெரும் என ஒன்றியக் குழு தலைவர் முனியம்மாள் ராஜேந்திரன் தெரிவித்தார். அப்போது ஆணையாளர் காந்தி உடனிருந்தார்.

**20 இல் தொழில்முனைவோர் பயிற்சி தொடக்கம்**

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பெண்களுக்கான வேளாண் தொழில்முனைவோர் பயிற்சி பிப்.20 ஆம் தேதி நடைபெற உள்ளது.

வர்த்தக ரீதியில் பூக்கள் மற்றும் அலங்கார செடிகளின் விதை உற்பத்தி குறித்த தொழில்முனைவோர் பயிற்சி, 25 நாள்களுக்கு நடைபெற உள்ளது. இந்தப் பயிற்சி தமிழகத்தில் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சி துறையின் நிதி உதவியோடு நடக்கிறது.

இந்தப் பயிற்சியில் நகர்ப்புற செடிவளர்ப்பு, செடிவளர்ப்பில் மதிப்புக் கூட்டுதல், ஒட்டு வளர்ப்பு முறை, வீட்டுத் தோட்டம், புல்தரை அமைத்தல், சந்தைப்படுத்துதல், நிதி மேலாண்மை மற்றும் திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகியவை பாடங்கள் மற்றும் செயல்விளக்கங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படும். இந்தப் பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆனால், தங்கும் வசதியை பங்கேற்பாளர்கள் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். பயிற்சியில் சேர மேல்நிலைப் படிப்பு

முடித்திருக்க வேண்டும். பட்டப் படிப்பு முடித்தோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விருப்பம் உள்ளவர்கள், தங்களது பெயரை தலைவர், மலரியல் மற்றும் எழிலூட்டும் பயிரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை - 3 என்ற முகவரியில் பதிவு செய்ய வேண்டும். தொலைபேசி 0422-6611230, 09443315304 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ள பெண்கள், பிப்.18 ஆம் தேதிக்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டும் என வேளாண் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பருத்தி சாகுபடி பெருந்திட்டம், காற்றாலை மின்சாரம் வெளியேற்றம் - சைமா வரவேற்பு**

**கோவை,**

தமிழக நிதி நிலை அறிக்கையில் பருத்தி சாகுபடி பெருந்திட்டம் மற்றும் காற்றாலை மின்சாரத்தை வெளியேற்றுவதற்கான அறிவிப்புகளை தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம் (சைமா) வரவேற்றுள்ளது.

இதுதொடர்பாக சைமா தலைவர் டி.ராஜ்குமார், வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி: தமிழகத்தில் 5 லட்சம் பஞ்சு பேல்களே உற்பத்தியாகின்றன. ஆனால் பஞ்சாலைகளின் தேவை 120 லட்சம் பேல்கள் என்ற அளவில் உள்ளன. இந்நிலையில் தமிழக அரசு வியாழக்கிழமை அறிவித்துள்ள நிதி நிலை அறிக்கையில் பருத்தி உற்பத்தியை மாநிலத்தில் ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு பருத்தி சாகுபடி பெருந்திட்டத்தை அறிவித்துள்ளது.

இதன் மூலம் 3.34 லட்சம் ஏக்கரில் பயிரிடப்படும் பருத்தி அளவை 2014-2015 நிதியாண்டில் 3.7 லட்சம் ஏக்கராக உயர்த்துவது பாராட்டத்தக்கது. தமிழக பஞ்சாலைகள் தங்களுக்குத் தேவையான பஞ்சு பேல்களை வட மாநிலங்களில் இருந்தும் ஆந்திர, கர்நாடக மாநிலங்களில் இருந்தும் அதிக லாரி வாடகை கொடுத்து தருவிக்கின்றன.அதே அளவுக்கு வாடகையை நூல் விற்பதற்கும் பஞ்சாலைகள் செலவு செய்கின்றன. அரசு தற்போது அறிவித்துள்ள தமிழ்நாடு

பருத்தி சாகுபடி பெருந்திட்டம் செயல்படத் துவங்கினால், நீண்ட கால அடிப்படையில் பருத்தி உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவடையும்.

ஏற்கெனவே பஞ்சாலைகள் கணிசமான காற்றாலைகளை தமிழகத்தில் நிறுவியுள்ளன. ஆனாலும் காற்று காலத்தில் உற்பத்தியான மின்சாரத்தை வெளியேற்றத் தேவையான மின் தொகுப்பு இல்லாததால், காற்றாலைகள் பெரும் இழப்பைச் சந்தித்தன. இதற்குத் தீர்வு காணும் வகையில் தமிழக நிதி நிலை அறிக்கையில் ரூ.1593 கோடி ஒதுக்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தைக்குமாடுகள், எருமைகள் வரத்து அதிகரிப்பு ஈரோடு,**

ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தைக்கு மாடுகள், எருமைகள் வரத்து அதிகரித்துள்ளது.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை கால்நடைச் சந்தை கூடுகிறது. இங்கு ஈரோடு, திருப்பூர், நாமக்கல், கரூர், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து ஏராளமான விவசாயிகள், வியாபாரிகள் தங்களது மாடுகள், எருமைகளை விற்பனை செய்து வருகின்றனர். இவற்றை வாங்குவதற்கு கர்நாடகம், ஆந்திரம், கேரளம், கோவா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வியாபாரிகள் வந்துசெல்கின்றனர். இச்சந்தைக்கு வழக்கமாக 300 மாடுகள், 350 எருமைகள் தான் விற்பனைக்கு வருவது வழக்கம். ஆனால், இந்த வாரம் வழக்கத்துக்கு மாறாக அதிக எண்ணிக்கையில், 500 மாடுகள், 400 எருமைகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன. மாடுகள் ரூ.16,000 முதல் ரூ.35,000 வரையிலும், எருமைகள் ரூ.18,000 முதல் ரூ.38,000 வரையிலும் விற்பனை செய்யப்பட்டன. வறட்சி நிலவி வருவதால் விவசாயிகள் மாடுகள், எருமைகளை விற்பனை செய்ய ஆர்வம்காட்டி வருவதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 42.64 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 42.64 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 611 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 250 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.93 டி.எம்.சி.

**வளத்தூர் கால்நடை கிளை நிலையம் மருத்துவமனையாகத் தரம் உயர்வு**

**குடியாத்தம்,**

குடியாத்தத்தை அடுத்த வளத்தூரில் இயங்கி வந்த கால்நடை கிளை நிலையம், மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டது.

இதையடுத்து புதிய மருத்துவமனைக்கு ஒரு கால்நடை உதவி மருத்துவர் பணியிடமும், கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடமும் உருவாக்கப்பட்டு, அவர்கள் பணியில் சேர்ந்தனர்.

புதிய கட்டடம் கட்ட ரூ. 26 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 20 சென்ட் நிலமும் தேர்வு செய்யப்பட்டது. விரைவில் கட்டடம் கட்டப்படும்.

தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவமனை தற்போது, வளத்தூர் ஊராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் தாற்காலிகமாகச் செயல்படத் தொடங்கியுள்ளது.

இந்தக் கட்டடத்தை எம்எல்ஏ கு.லிங்கமுத்து திறந்து வைத்தார்.

நிகழ்ச்சிக்கு வளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் எஸ். புஷ்பா தலைமை வகித்தார். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத் தலைவர் எஸ். ராமகிருஷ்ணன் வரவேற்றார்.

கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ஜி. கமலநாதன், உதவி இயக்குநர் ஜி. இளங்கோ, கால்நடை உதவி மருத்துவர்கள் அந்துவன், உமாபதி,

காந்திமதி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் எம். சேட்டு, கருணீகசமுத்திரம் ஊராட்சி மன்றத் தலைவர் எம். கோவிந்தன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் திலகா சரவணன், பரமசிவம், கடன் சங்க இயக்குநர்கள் வி.பி. ஏகாம்பரம், ஆர். சேகர், ஊராட்சி துணைத் தலைவர் தவுலத் பாஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சென்னைக்கு தினமும் 4 டன் காய்கறிகள்

**அரக்கோணம்,**

சென்னை மாநகர காய்கறித் தேவையை பூர்த்தி செய்ய பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்துக்கு வேலூர் மாவட்ட தோட்டக் கலைத் துறை சார்பில் அரக்கோணத்தை அடுத்த கீழ்வீதி காய்கறி சேமிப்பு கிடங்கில் இருந்து தினமும் 4 டன் காய்கறிகள் அனுப்பப்பட்டு வருவதாக வேலூர் மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் தெரிவித்தார். அரக்கோணத்தை அடுத்த நெமிலி அருகே உள்ள கீழ்வீதி கிராமத்தில் வேளாண் விளைபொருள் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. இதற்காக இப்பகுதியில் விவசாயிகளுக்கு தோட்டக் கலைத் துறையின் மூலம் காய்கறி விதைகளும், உரங்களும் மானிய விலையில் அளிக்கப்பட்டன. இதில் விளையும் காய்கறிகளை தமிழக அரசின் வேளாண் வணிகத் துறையினரின் கண்காணிப்பில் கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டு விவசாயிகள் முன்னிலையில் விலைநிர்ணயிக்கப்பட்டு சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு அனுப்பப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன் துவக்கப்பட்ட இந்த கொள்முதல் நிலையத்தில் இந்த பகுதியை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து தினமும் 4 முதல் 6 டன் வரை காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு சென்னைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இந்த கொள்முதல் நிலையத்தை வேலூர் மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் வியாழக்கிழமை நேரில் பார்வையிட்டார். காய்கறிகளை சென்னைக்கு அனுப்ப அரசின் மானிய உதவியுடன் மினி லாரியை ஒரு விவசாயிக்கும், காய்கறிகளை சேமித்து எடுத்து வர விவசாயிக்கு மானிய விலையில் டிராக்டரையும் ஆட்சியர் வழங்கினார். பின்னர் ஆட்சியர் இரா.நந்தகோபால் கூறியது: சென்னையின் காய்கறி தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும், நெடுந்தூரத்தில் இருந்து

சென்னைக்கு காய்கறிகள் கொண்டு வரப்படுவதால் போக்குவரத்து செலவுகள் அதிகமாவதால் அதை தவிர்க்க சென்னையை சுற்றியுள்ள கிராமங்களில் காய்கறிகளை உற்பத்தி செய்து அதை சென்னைக்கு அனுப்பி விலைகுறைவாக நுகர்வோர் பெற செய்யும் முயற்சியாகவும் ஏற்படுத்தப்பட்ட பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தின் நோக்கம் தற்போது நிறைவேற துவங்கியுள்ளது. விரைவில் இந்த காய்கறிகள் அனுப்பும் அளவு அதிகரிக்கும். இதற்கான முயற்சியில் வேலூர் மாவட்ட தோட்டக் கலைத் துறை ஈடுபடும் என்றார்.

முன்னதாக நெமிலி ஒன்றியத்துக்குள்பட்ட ரெட்டிவலம் கிராமத்தில் விவசாயிகளுக்கு கைதெளிப்பான், விசை தெளிப்பான் கருவிகளையும், திருந்திய நெல் சாகுபடி பயிரிட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசின் மானிய தொகையையும் ஆட்சியர்  வழங்கினார்.இந்நிகழ்ச்சிகளில் நெமிலி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கோமதி மணிவண்ணன், கீழ்வீதி ஊராட்சித் தலைவர் சிவகாமிநாதன் மற்றும் வேளாண் துறை அலுவலர்கல் கலந்து கொண்டனர்.

ஆயர்பாடியில்... காவேரிப்பாக்கம் ஒன்றியம் ஆயர்பாடி ஊராட்சியில் 65 ஏக்கர் நிலத்தில் முக்கிய தொழில் நுட்பங்களுடன் திருந்திய நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

இதனை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் நந்தகோபாலிடம் சாகுபடி முறைகள் குறித்து வேளாண்மை அதிகாரிகள் எம்.ஸ்டீபன் ஜெயகுமார், எஸ்.விஸ்வநாதன், மாலதி மற்றும் அதிகாரிகள் வியாழக்கிழமை விளக்கினர். பின்னர் விவசாயிகளுடன் ஆட்சியர் கலந்துரையாடல் நடத்தினார். முன்னதாக ஆட்சியரை காவேரிப்பாக்கம் ஒன்றியக் குழுத் தலைவர் சரவணன், துணைத் தலைவர் மணி, ஒன்றியக் குழு உறுப்பினர் தர்மநீதி சரவணன் உள்ளிட்ட பலர் வரவேற்றனர்.

**"புதிய வளர்ச்சித் திட்டங்கள் அறிவிப்பால் பருத்தி உற்பத்தி உயரும்'**

**குமாரபாளையம்,**

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் பருத்தி உற்பத்திக்கான புதிய திட்டங்கள் அறிவிப்பால், பருத்தி உற்பத்தி அதிகரிப்பதோடு, விரைவில் நூல், ஜவுளிகளின்

விலை குறையும் என, தென்னிந்திய விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சம்மேளனம் கருத்து தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சம்மேளனத் தலைவர் எம்.எஸ்.மதிவாணன் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக அரசு ஏழை, எளிய மக்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில், விலைவாசி உயர்வு இல்லாத நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது வரவேற்கத்தக்கது.

பருத்தி உற்பத்திக்கான புதிய திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளதால், நிகழாண்டு பருத்தி விளைச்சல் அதிகரிக்கும். இந்தியாவில் விளையும் மொத்த பருத்தி உற்பத்தியில் தமிழகத்தில் மட்டும் 50 சதம் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு 110 லட்சம் பேல் பருத்தி தமிழகம் உற்பத்தி செய்துள்ளது.

நிகழாண்டு உற்பத்தி மேலும் அதிகரிப்பதோடு, பருத்தி நூல், ஜவுளிகளின் விலை குறையும் வாய்ப்புகள் உள்ளன. மின் தட்டுப்பாட்டைப் போக்க முயற்சி மேற்கொள்ளப்படுவது பாராட்டுக்குரியது. தமிழகத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, 3330 மெகாவாட் மின்சாரம் பிற மாநிலங்களிலிருந்து வாங்கப்படும் எனும் அறிவிப்பும்,

தமிழகத்தின் மின் தேவையைச் சமாளிக்க 12,789 மெகாவாட் மின்சாரத்தை காற்றாலை, இயற்கை முறையில் உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளதும் வரவேற்கத்தக்கது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நெல் கொள்முதல் நிலையங்களில் "ஏ' கிரேடு நெல்லுக்கு ரூ. 1,415 விலை நிர்ணயம்

**கரூர்,**

நெல் கொள்முதல் நிலையங்களில் "ஏ' கிரேடு நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 1,415 விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கரூர் மாவட்டத்தில் 2014 கரீப் கொள்முதல் பருவத்தில் விளைந்துள்ள நெல்லினை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இதில், கரூர் வட்டத்தில் பள்ளபாளையம், அரவக்குறிச்சி வட்டத்தில் சின்னதாராபுரம், குளித்தலை வட்டத்தில் நங்கவரம், நச்சலூர், கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் கோவக்குளம், பஞ்சப்பட்டி ஆகிய பகுதிகளில் 6 கொள் முதல் நிலையங்கள் கடந்த ஜன. 1-ம் தேதி முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் கரூர் வட்டத்தில் சுக்காலியூர், கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் கட்டளை ஆகிய இடங்களில் கூடுதலாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத்தொகையும் சேர்த்து "ஏ' கிரேடு நெல்லுக்கு ஊக்கத்தொகை ரூ. 50 உள்பட ரூ. 1,415-ம், பொது ரக நெல்லுக்கு ரூ. 1,360-ம் வழங்கப்படும். நெல் கொள்முதல் செய்யும் இடத்தில் 17 சதவீத ஈரப்பதத்துடன், அனுமதிக்கப்பட்டுள்ள திரிபுகளுக்கு மிகாமல் கொள்முதல் செய்யப்படும். எனவே விவசாயிகள் நெல்லினை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்று பயனடையலாம்.

**நெல் கொள்முதலில் முறைகேடு: 10 பணியாளர்கள் பணி நீக்கம்**

**தஞ்சாவூர்,**

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேட்டில் ஈடுபட்ட 10 பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்திருப்பது:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் மாவட்டத்தில் விவசாயிகள் நலன் கருதி மொத்தம் 394 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், 8 சிறப்பு நடமாடும் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரை 1,58,950 டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.மேலும், கொள்முதல்

நிலையங்களில் எந்தவித புகார் மற்றும் குறைபாடு இல்லாமல் பணிபுரிய அனைத்து பணியாளர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அவ்வப்போது ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கொள்முதல் நிலையங்களில் கண்டறியப்படும் முறைகேடுகள் தொடர்பாக முதுநிலை மண்டல மேலாளரால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், இதுவரை 10 பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சென்னை தலைமை அலுவலகக் கண்காணிப்புக் குழுவும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறது.

கொள்முதல் நிலையங்களில் ஏற்படும் குறைபாடுகள் தொடர்பான புகார்களை 93447 04615 (தஞ்சாவூர் அலகு), 99767 88168 (கும்பகோணம் அலகு), 99653 40907 (பட்டுக்கோட்டை அலகு) ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் தெரிவிக்கலாம்.

**நீர்வடிப்பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்**

**பெரம்பலூர்,**

நீர்வடிப்பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர் தாற்காலிக பணிக்கு பிப். 17-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நீர்வடிப்பகுதியில், நீர்வடிப்பகுதி வளர்ச்சி அணி உறுப்பினராக பணிபுரிய பொறியியல் (வேளாண்மை மற்றும் சிவில்) சமூகவியல், வேளாண்மை படித்த பட்டதாரிகள், அனுபவமுள்ள பட்டயதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு, அரசு விதிகளின்படி மதிப்பூதியம் வழங்கப்படும்.இப்பணியில் சேர ஆர்வமுடையோர் விண்ணப்பங்களை பிப். 17-ம் தேதிக்குள் திட்ட அலுவலர் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, 175 - பி, 2-வது

குறுக்கு தெரு, ராஜாநகர், துறைமங்கலம், பெரம்பலூர் - 621220 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பிப். 21-ம் தேதி காலை 11 மணிக்கு வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் நேர்காணல் நடைபெறும். தகுதியுடையோர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**அனைத்து பயிர்களுக்கும் காப்பீட்டு பிரீமியம் செலுத்த கோரிக்கை கோவில்பட்டி,**

எட்டயபுரம் வட்டம், முத்தலாபுரம், படர்ந்தபுளி குறுவட்டத்துக்கு உள்பட்ட விவசாயிகளுக்கு பயிர் செய்த அனைத்துப் பயிர்களுக்கும் காப்பீட்டு பிரீமியம் செலுத்த உத்தரவிடக் கோரி அப்பகுதி விவசாயிகள் சார் ஆட்சியர் அலுவலகம் முன்பு வியாழக்கிழமை திரண்டனர்.

பின்னர் மதிமுக மாநில விவசாய அணி துணைச் செயலர் அ.வரதராஜன் தலைமையில், சின்னமலைக்குன்று ஊராட்சித் தலைவர் சோலைச்சாமி, விவசாயிகள் சங்கத் தலைவர்கள் பாலசுப்பிரமணியன் (சின்னமலைக்குன்று), ராஜேந்திரன் (கழுகாசலபுரம்), ராஜா ஆகியோர் முன்னிலையில், சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கந்தசாமியிடம் அளித்த மனு:

கடந்த ஆண்டு பல்லாயிரம் ஏக்கர் பரப்பளவில் உளுந்து, பாசி, கம்பு, மக்காச்சோளம், கோவில்பட்டி சோளம், சிவப்பு சோளம், சூரியகாந்தி, பருத்தி போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டன.

போதிய மழை இல்லாததால் பயிர்கள் அனைத்தும் கருகிவிட்டன. இதையடுத்து விவசாய நிலங்களில் குறைவான விளைச்சல் இழப்பீட்டை தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீடு செய்து ஈடு செய்யலாம் என அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் 35 வகையான பயிர்களுக்கு காப்பீடு செய்யலாம் என அரசு அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில், 2013 - 2014-ம் ஆண்டுக்கான பயிர் காப்பீடு செய்ய 2014 ஜன. 31-ம் தேதி விவசாயிகளுக்கு அரசு

உத்தரவிட்டுள்ளது. 60 குறு வட்டத்துக்கும் அரசே பயிர்களை தேர்வு செய்த பயிர்களுக்கு மட்டுமே காப்பீடு செய்யவேண்டும்.

அதை விடுத்து அந்தந்த குறுவட்டத்துக்கு அறிவிக்கப்பட்ட பயிரை தவிர மற்ற வகையான பயிர்களுக்கு காப்பீடு செய்ய முடியாது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மண்ணின் தன்மையறிந்து அதற்கேற்றவாறு விவசாயிகள் பயிர் செய்துள்ளனர். பயிரிடப்பட்ட அனைத்து பயிர்களுக்கும் காப்பீடு செய்யலாம் என அரசு உத்தரவிட வேண்டும் என அம் மனுவில் கூறப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியாளர், கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.6.85 லட்சம் ஊக்கத்தொகை திருநெல்வேலி,**

முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு திருநெல்வேலி ஆவின் நிறுவனத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற விழாவில் பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.6.85 லட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

ஆண்டு முழுவதும் பால் வழங்கிய 300 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு அதிக அளவில் பால் வழங்கியவர்களுக்கு முதல் பரிசாக 100 பேருக்கு தலா ரூ.3 ஆயிரம், இரண்டாம் பரிசாக 100 பேருக்கு தலா ரூ.2 ஆயிரம், மூன்றாம் பரிசாக தலா ரூ.1000 வழங்கப்பட்டது.

இவை தவிர, சிறந்த பால் கூட்டுறவு சங்கங்களில் முதல் பரிசாக ரூ.15 ஆயிரமும், இரண்டாவது பரிசாக தலா ரூ.10 ஆயிரம் வீதம் 5 சங்கங்களுக்கும், 5 சங்கங்களுக்கு மூன்றாம் பரிசாக தலா ரூ.5 ஆயிரமும் வழங்கப்பட்டது.

விழாவுக்கு திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட பால் வள ஒன்றிய பெருந்தலைவர் எஸ். ரமேஷ் தலைமை வகித்தார். துணைப் பதிவாளர் து. கஸ்தூரிபாய் முன்னிலை வகித்தார். ஆவின் பொது மேலாளர் தெ. பாலாஜி வரவேற்றார்.

மாநிலங்களவை உறுப்பினர் எஸ். முத்துக்கருப்பன், ஊக்கத்தொகைகளை வழங்கி பாராட்டிப் பேசினார். மாநிலங்களவை உறுப்பினர் விஜிலா சத்தியானந்த், மேயர் (பொறுப்பு) பூ. ஜெகநாதன், திருநெல்வேலி பால் சேகரிப்புக் குழுத் தலைவர் பா.

அன்னச்சாமி, திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் என பலர் வாழ்த்திப் பேசினர்.முன்னதாக, ஆவின் அலுவலக நுழைவாயிலில் அண்ணா தொழிற்சங்கக் கொடியும், அதிமுக கட்சிக் கொடியும் ஏற்றப்பட்டு ஏழை, எளிய மக்கள் 66 பேருக்கு இலவச வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்கத்தினர், ஆவின் ஊழியர்கள், அதிமுக நிர்வாகிகள் என பலர் கலந்துகொண்டனர்.

## 6 இடங்களில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலைகள்

**கடலூர்,**

தானே புயலால் பாதிக்கப்பட்ட 6 இடங்களில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில், மாவட்ட முந்திரி விவசாயிகளுக்கான கருத்தரங்கு அண்மையில்

நடந்தது. கருத்தரங்கில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வாசனைப் பயிர்கள் மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் துறைத் தலைவர் ஜான்சிராணி பேசியதாவது:

தோட்டக்கலைப் பயிர்களில் ஒட்டுரக விதைகளைக் கண்டுபிடித்து, தரமான காய்கறிகளை அதிகளவில் உற்பத்தி செய்கிறோம். விதை விலை அதிகமாக இருக்கும். ஆனால், விஆர்ஐ 3 வீரிய ஒட்டுரகச் செடிகள், நெருக்க நடவு மூலம் அதிக மகசூலைத் தருகிறது. கடலூரில் 1,250 ஏக்கரில் நெருக்க நடவு முறையில் முந்திரி நடப்பட்டுள்ளது. முறையாக தழை, மணி, சாம்பல் சத்து உரங்களை இட்டு, பராமரித்தால் 2 ஆண்டுகளில் அதிக மகசூல் கிடைக்கும் என்றார்.

வேளாண் இணை இயக்குநர் சந்திரமோகன் பேசுகையில், மலைப் பகுதிகளில் விளைந்த காலிபிளவர், முட்டைகோஸ் அருகிலுள்ள பண்ருட்டி, அண்ணாகிராமம் பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. தெளிப்பு நீர் பாசனம் மூலம் வேர்க் கடலையில் ஏக்கருக்கு 10 முதல் 14 மூட்டை வரை உற்பத்தி செய்யலாம். விதைக்காக ரூ 8,000, உரத்திற்காக ரூ.3,000 மானியம் வழங்கப்படுகிறது என்றார். தோட்டக்கலை துணை இயக்குநர் ராமலிங்கம் பேசுகையில்,

மாவட்டத்திலுள்ள ஒரு லட்சத்து 12 ஆயிரம் ஏக்கர் தோட்டப் பயிர்களில் 32 ஆயிரத்து 500 ஏக்கரில் முந்திரியும், 4,500 ஏக்கரில் வாழையும் உள்ளது. தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் ஏக்கருக்கு 80 விஆர்ஐ 3 வீரிய ஒட்டுரக முந்திரி செடிகள் மானியத்தில் வழங்கப்படுகிறது.

பழைய முந்திரி தோட்டங்களை பராமரிக்க ஏக்கருக்கு 15 விஆர்ஐ வீரிய ஒட்டுரக முந்திரி செடிகள் வழங்கப்படுகின்றன. தானே மறுவாழ்வுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 50 சமுதாய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணி முடிந்தது. 200 தனி நபர் ஆழ்குழாய் கிணறுகளில் 95 முடிந்துள்ளது.

தானே புயல் பாதித்த பகுதிகளில் மத்திய அரசின் மானியத்தில் அறுவடைக்குப் பின் விவசாயிகள் வேலைவாய்ப்பிற்காக முந்திரி பதப்படுத்தும் 6 தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் உள்ளது என்றார் தோட்டக்கலை துணை இயக்குநர்.

**"விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பட்ஜெட்'**

**கடலூர்,**

தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் உள்ளது என்றார் கடலூர் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்புத் தலைவர் பி.ரவீந்திரன்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்துக்கு ரூ.323 கோடி ஒதுக்கீடு, கரும்பு சாகுபடி திட்டத்துக்கு 12,500 ஏக்கர் பரப்பு விரிவுபடுத்தும் அறிவிப்பு, கால்நடை காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கம், எந்த ஆண்டும் இல்லாத வகையில் கூட்டுறவு அமைப்புகள் மூலம் ரூ.5,000 கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு, பயிர்க் கடனை குறித்த காலத்துக்குள் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி சலுகைகள் அளிக்க ரூ.200 கோடி ஒதுக்கீடு, நீர்ப்பாசன துறைக்காக ரூ.3,669 கோடி ஒதுக்கீடு, அணைகள் புனரமைப்புத் திட்டத்துக்கு ரூ.329.65 கோடி ஒதுக்கீடு, உழவர் பாதுக்காப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்கு ரூ.4,200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொலைநோக்கு

திட்டங்களோடு தயாரிக்கப்பட்டுள்ள இந்த பட்ஜெட், விவசாய வளர்ச்சிக்கும், வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கும். நீர்நிலை ஆதார புனரமைப்பு மற்றும் வெள்ள நீர் வடிகால் திட்டத்தில் கடலூர் மாவட்டத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றார்.

நவீன மீன்பிடி துறைமுகம் அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம்: கடலூருக்கு நவீன மீன்பிடி துறைமுகம் அறிவிப்பு இல்லாதது ஏமாற்றத்தை அளிக்கிறது என்றார் அனைத்துக் குடியிருப்போர் நலச் சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலர் மு.மருதவாணன்.

ரூ.1,260 கோடி மதிப்பீட்டில் 60 ஆயிரம் பசுமை வீடுகள், ரூ.100 கோடி மதிப்பீட்டில் 118 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக்கு ரூ.2,800 கோடி நிதி ஒதுக்கீடு, 9,235 கிலோ மீட்டர் கிராம சாலைகள் ரூ.2,308 கோடியில் தார்ச் சாலையாக மாற்றம், 3,500 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்த நடவடிக்கை, ரயில்வே மேம்பாலம், சுரங்கப்பாதை திட்டத்துக்கு ரூ.684 கோடி ஒதுக்கீடு, சாலை மற்றும் பாலம் திட்டத்திற்காக ஜப்பான் நிறுவனத்திடம் ரூ.2,000 கோடி நிதியுதவி பெறத் திட்டம் ஆகிய திட்டங்கள் தமிழக வளர்ச்சிக்கு கண்டிப்பாக உதவும். கடலூர் நகராட்சிக்கு ஒருங்கிணைந்த வடிகால் வசதி, 50 ஆண்டுகால கோரிக்கையான கடலூரில் நவீன மீன்பிடி துறைமுகம் ஆகிய அறிவிப்புகள் இல்லாதது ஏமாற்றத்தை அளிக்கிறது என்றார்.

**உழவர் நண்பர்களுக்கு வேளாண் பயிற்சி முகாம்**

**திண்டிவனம்,**

திண்டிவனம் வேளாண் அலுவலகத்தில், உழவர் நண்பர்களுக்கு பயிற்சி முகாம் மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

வேளாண் துறை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மரக்காணம் ஒன்றியக்குழு துணைத் தலைவர் பாண்டுரங்கன், வேளாண் உதவி இயக்குநர் கென்னடிஜெபக்குமார் முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலர் எத்திராஜ் வரவேற்றார். நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து எம்எல்ஏ த.ஹரிதாஸ் பேசியது:

வேளாண் துறையில் தமிழக அரசின் திட்டங்கள் குறித்து உழவர் நண்பர்கள் மூலம் விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும். உழவர் நண்பர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ள முன்னோடி விவசாயிகள் வேளாண் துறை மற்றும் அதனை சார்ந்த துறைகளுக்கும் விவசாயிகளுக்கு இடையில் இணைப்பு பாலமாக இருக்கின்றனர். தற்போது மூன்று கிராமங்களுக்கு ஒரு உழவர் நண்பர்கள் உள்ளனர் என்றார்.

மேலும் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட உழவர் நண்பர்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் நுண்ணீர் பாசனத் திட்ட பயனாளிகளுக்கு சொட்டுநீர் பாசனக் கருவிகளையும் எம்எல்ஏ வழங்கினார்.

நிகழ்ச்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத் தலைவர்கள் மணிமாறன், நாராயணன், பிரேம்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆத்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

## நெல் கொள்முதல் செய்ய ரூ. 2 கோடி: கூட்டுறவு சங்கத்திடம் அமைச்சர் வழங்கல்

**காரைக்கால்,**

காரைக்காலில் நெல் கொள்முதல் செய்வதற்காக புதுவை அரசு சார்பில் ரூ. 2 கோடிக்கான காசோலையை கூட்டுறவு சங்க நிர்வாகியிடம் வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு வியாழக்கிழமை வழங்கினார்.

காரைக்காலில் சம்பா, தாளடி அறுவடைப் பணி ஏறக்குறைய முடிந்துள்ள நிலையில், புதுச்சேரி அரசு சார்பில் கூட்டுறவு நிறுவனங்களால் நெல் கொள்முதல் செய்யப்படாத நிலை உள்ளதாக, விவசாயிகள், பல்வேறு அரசியல் கட்சியினர் புகார் கூறிவந்தனர்.

இந்நிலையில், புதுச்சேரி அரசு ரூ. 2 கோடியை காரைக்கால் பகுதியில் நெல் கொள்முதலுக்கு ஒதுக்கியது. இதற்கான காசோலையை காரைக்கால் மத்திய கூட்டுறவு விற்பனை மற்றும் விநியோகச் சங்க (மார்க்கெட்டிங் சொசைட்டி) நிர்வாகியிடம் அளிக்கும் நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது.புதுச்சேரி வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு, மார்க்கெட்டிங சொசைட்டி மேலாண்

இயக்குநர் எல். மோகனிடம் காசோலையை வழங்கி விவசாயிகளிடையே பேசியது:

காரைக்காலில் அறுவடைப் பணி நடக்கும்போது நெல் கூட்டுறவு நிறுவனங்களால் கொள்முதல் செய்யப்படாததால் விவசாயிகள் அவதிக்குள்ளாக நேர்ந்தது. இதுகுறித்து நானும், காரைக்கால் பகுதி சட்டப்பேரவை உறுப்பினர்களும் முதல்வர் ரங்கசாமியிடம் விளக்கிக் கூறினோம். அவரும் ரூ. 2 கோடி நிதியை ஒதுக்கித் தந்தார். முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு உள்ள பிரச்னை, இதனை சீர் செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. குறிப்பாக, விவசாயிகளுக்கு மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அதனை புதுச்சேரி அரசு செய்யும் என்றார்.

நிகழ்ச்சியில் காரைக்கால் விற்பனைக்குழுத் தலைவர் கே.ஆர். உதயக்குமார், வேளாண்துறை இயக்குநர் ராமமூர்த்தி, கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன், மார்கெட்டிங் சொசைட்டி முன்னாள் தலைவர் எஸ். ஆசைத்தம்பி, வேளாண் கல்லூரி முதல்வர் வி. செல்லுத்து உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அரசின் காலதாமதமான நடவடிக்கை என விவசாயிகள் கருத்து:

காரைக்காலில் சுமார் 20 ஆயிரம் டன் நெல் உற்பத்தியாகியுள்ளது. அறுவடைப் பணி கடந்த 45 நாள்களாக நடைபெற்று வருகிறது. ஏறக்குறைய 60 சதவீத நெல், தனியாரிடம் இழப்பில் தரப்பட்டு விட்டது.

அரசு நிறுவனம் கொள்முதல் செய்ய முன்வராததால், தனியார் தாங்கள் நிர்ணயித்த விலைக்கு நெல்லை வாங்கி வருகின்றனர்.

இப்போதுகூட அளித்துள்ள ரூ. 2 கோடி வெறும் 1500 டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்ய முடியும். இது கண்துடைப்பாகவே கருதவேண்டியுள்ளது. அரசு இந்தத் தொகையை அளித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறோம்.வரும் ஆண்டுகளில் இதுபோன்று இல்லாமல், பட்ஜெட் தாக்கல் செய்யும் போதே நெல்

கொள்முதலுக்கென தனியாக நிதி ஒதுக்க வேண்டும் என விவசாயிகள் தரப்பில் வலியுறுத்தப்படுகிறது.

**இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு சலுகைகள்**

**பெங்களூரு,**

கர்நாடகத்தில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு கடன் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் என்று, அந்த மாநில வேளாண் துறை அமைச்சர் கிருஷ்ண பைரேகெüடா தெரிவித்தார்.

பெங்களூருவில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், இயற்கை வேளாண் விளை பொருள் விற்பனை மையத்தைத் தொடக்கிவைத்து அவர் பேசியது:

கர்நாடகத்தில் 6 இடங்களில் இயற்கை வேளாண் விளை பொருள் விற்பனை மையங்கள் தொடங்கப்படும். பெங்களூருவைத் தொடர்ந்து மற்ற நகரங்களில் அடுத்த மாதத்திற்குள் விற்பனை மையங்கள் தொடங்கப்படும்.

இயற்கை வேளாண் விற்பனை மையங்களைத் தொடங்க கர்நாடகத்துக்கு ரூ. 24 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. மேலும், மாநிலத்தின் பங்களிப்பாக ரூ. 36 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

செயற்கை உரங்களால் விளைவித்த விளை பொருள்களைக் காட்டிலும், இயற்கை விவசாயத்தில் விளைந்த விளை பொருள்களில் கூடுதல் ஊட்டச்சத்து இருக்கும். இதுகுறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், விவசாயிகளுக்கு கடன் உள்ளிட்ட சலுகைகளை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. ஆரோக்கியமான வாழ்வுக்கு இயற்கை விளை பொருள்கள் அவசியம் என்பதை உணர்ந்து, விவசாயிகள் இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்றார் அவர். நிகழ்ச்சியில் விவசாயப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் நாராயண கெüடா, தோட்டக்கலைத் துறை கூடுதல் இயக்குநர் ராமகிருஷ்ணா, துணை இயக்குநர் பவித்ரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## குறைந்தது தேங்காய் விளைச்சல்; கொப்பரை விலை அதிகரிப்பு : தென்னை விவசாயத்தில் மீண்டும் ஆர்வம்



**கீழக்கரை,**

ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பாண்டில் மழை பெய்யாததால் தேங்காய் விளைச்சல் குறைந்தது. தேவை அதிகரிப்பால் கொப்பரை பருப்பு விலை 47 லிருந்து 78 ரூபாயாக உயர்ந்துள்ளது.

கீழக்கரை, காஞ்சிரங்குடி, பெரியபட்டினம், தாமரைக்குளம், ரெகுநாதபுரம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பிரதான தொழிலாக தென்னை விவசாயத்தில் ஈடுபட்டு உள்ளனர். இரண்டு ஆண்டுகளாக, மழையின்றி விளைச்சல் வெகுவாக குறைந்துவிட்டது. கடந்தாண்டு வரை கொப்பரை பருப்பு கிலோ 47 ரூபாய்க்கு கொள்முதல் செய்த மொத்த வியாபாரிகள் தற்போது தேவை அதிகரிப்பால், 78 ரூபாய்க்கு வாங்க முன் வந்துள்ளனர். கடந்தாண்டு விலை இல்லாததால் மரங்கள் பராமரிப்பில் விவசாயிகள் கவனம் செலுத்தவில்லை.

பெரியபட்டினம் தென்னை விவசாயி மாலிக் கூறியதாவது: விலைவாசி உயர்ந்து வரும் நிலையில் தேங்காய் விலையில் ஏற்பட்ட பெரும் சரிவால், ஏராளமானோர்

தென்னை விவசாயத்தில் ஆர்வம் செலுத்தவில்லை. இந்தாண்டு மழை இல்லாததால், தேங்காய் வடிவம் மாறி காய்ப்பு குறைந்து விட்டது. 10ஆயிரத்திற்கும் அதிகமான காய்கள் பறித்த தோப்புகளில் தற்போது 3 ஆயிரம் காய்கள் கூட காய்ப்பது இல்லை.
உரம், மருந்தடிப்பு, வெட்டுக்கூலி, உரி கூலி இப்படி கூடுதல் செலவினங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டி உள்ளது. தற்போது, கொப்பரைக்கு நல்ல விலை கிடைத்தும் காய் இல்லை. கொப்பரை விலையேற்றம் காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை சாகுபடியில் விவசாயிகள் மீண்டும் ஆர்வம் செலுத்த துவங்கியுள்ளனர். தேங்காய் கிலோ 18 முதல் 22 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கோடை மழை கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில் தென்னங்கன்றுகள் ஆயிரக்கணக்கில் நடப்பட்டுள்ளன. நிலத்தடி நீர் ஆதாரம் குறைந்து விடும் என்ற அச்சமும் விவசாயிகளிடையே உள்ளது, என்றார்.

**காதலர் தினம்: ரூ.40 கோடிக்கு கொய் மலர் ஏற்றுமதி**



**புதுடில்லி,**

நாளை, காதலர் தினம் கொண்டாடப்படுவதையொட்டி, இந்தியா வில் இருந்து, 40 கோடி ரூபாய் மதிப்பில், கொய் மலர் ஏற்றுமதியாகும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், பெங்களூரு, புனேவில் இருந்து மட்டும், தலா, 60 லட்சம் கொய் மலர்கள் ஏற்றுமதி செய்யப்படும் என, இந்திய தாவர வளர்ப்பு வல்லுனர்கள் சங்கம் தெரிவித்து உள்ளது.

இரு மடங்கு உயரும் : இந்தியாவில் இருந்து, ஐரோப்பிய நாடுகள் மற்றும் வளைகுடா நாடுகள், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, இத்தாலி, கிரீஸ், சுவீடன், நியூசிலாந்து நாடு களுக்கு கொய் மலர்கள் ஏற்று மதியாகின்றன. நடப்பாண்டு, ரஷ்யா, லெபனான் நாடுகளும், இந்திய கொய் மலர்களுக்கு, புதிய சந்தை வாய்ப்பை வழங்கியுள்ளன. கடந்த, 2011 - 12ம் நிதியாண்டில், இந்தியாவின் மலர் ஏற்றுமதி, முந்தைய நிதியாண்டை விட, 23.3 சதவீதம் அதிகரித்து, 5.90 கோடி டாலராக காணப்பட்டது. இது, வரும், 2014 - 15ம் நிதியாண்டில், இரு மடங்கு உயரும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இந்திய ரோஜாக்களின் ஏற்று மதியில், நியூசிலாந்தின் பங்களிப்பு, 50 சதவீதமாக உள்ளது. ஐரோப்பாவில், வரலாறு காணாத பனிப் பொழிவு காரணமாக, ரோஜா உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், இந்தியாவின் நீண்ட தண்டுள்ள ரோஜாக்களின் ஏற்றுமதி, 20 - 25 சதவீதம் அதிகரிக்கும் என, தெரிகிறது. இருந்தபோதிலும், சர்வதேச மலர் சந்தையில், இந்தியாவின் பங்களிப்பு, 2 சதவீதம் என்ற அளவிற்கே உள்ளது. இந்த ஆண்டு, சீனாவில், ரோஜா சாகுபடி பாதிக்கப் பட்டுள்ளது; இதனால், உலக நாடுகளின் கவனம், இந்தியா பக்கம் திரும்பி உள்ளது. இதையடுத்து, மலர் சாகுபடியில், தமிழகத்தில், முதல் இடத்தில் உள்ள, ஓசூரில், ரோஜா ஏற்றுமதி, களை கட்ட துவங்கியுள்ளது.

ஓசூரில் இருந்து ரோஜா இதுகுறித்து, ஓசூர் விவசாயிகள் கூறியதாவது: ஓசூரில், ஆறு மாதத்துக்கு முன், பலத்த சூறாவளி காற்று வீசியதால், ரோஜா சாகுபடி பாதிக்கப்பட்டு, உற்பத்தி குறைந்தது. இருந்த போதிலும், சீனா, எத்தியோபியாவில், அதிகளவில், உற்பத்தி குறைந்துள்ளதால், ஓசூர் ரோஜா தேவை அதிகரித்துள்ளது. காதலர் தினத்திற்காக, ஓசூரில், முன்னணி ரோஜாக்கள், 10 - 40 ரூபாய் என, விலை நிர்ணயம் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இம்மலர்கள் விளையும், ஓசூர் சுற்றியுள்ள கிராமங்களில், மின்வெட்டு தளர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## இலை விலை ரூ.25

**தேவதானப்பட்டி,**

தேனி மாவட்டத்தில், வறட்சி ஏற்பட்டு, வாழை இலை வரத்து குறைந்ததால், 200 இலை கொண்ட கட்டு, மூவாயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப் படுகிறது. கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் பகுதியில் வாழை சாகுபடி அதிகம் நடக்கிறது. பெரியகுளம் தாலுகாவில், குள்ளப்புரம், அ.வாடிப்பட்டி, மருகால்பட்டி, சில்வார்பட்டி, கெங்குவார்பட்டி, தேவதானப்பட்டி பகுதிகளிலும் சாகுபடி நடக்கிறது.

இங்குள்ள விவ சாயிகள், சென்னை, பெங்களூரு நகரங்களுக்கு அனுப்புகின்றனர். தற்போது, முகூர்த்தங்கள், விழாக்கள் அதிகரித்து உள்ளன. வறட்சியால், சந்தைக்கு வாழை இலை வரத்து குறைந்துள்ளது. இதனால், 200 இலைகள் கொண்ட கட்டு, 3000 ரூபாயாக விலை உயர்ந்துள்ளது. போக்குவரத்து செலவு, கமிஷன் போன்றவற்றை கணக்கிட்டால், ஒரு இலையை 25 ரூபாய்க்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேடு : 10 பேர் சஸ்பெண்ட்: தஞ்சை கலெக்டர் அதிரடி

**தஞ்சாவூர்,**

தஞ்சை மண்டலத்தில், நெல் கொள்முதல் நிலையங்களில், முறைகேட்டில் ஈடுபட்ட, 10 பணியாளர்கள், "சஸ்பெண்ட்' செய்யப்பட்டுள்ளனர். தஞ்சை மண்டலத்தில், நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் இயங்கும் கொள்முதல் நிலையங்களில், விவசாயிகளிடம் இருந்து நெல்லை பெற்று, உரிய தொகையை, ரொக்கமாக வழங்கும் முறை, அமலில் உள்ளது. இதில், மூட்டைக்கு, குறிப்பிட்ட தொகையை, கமிஷனாக பிடித்துக் கொண்டு, ரசீதில் மட்டும் சரியான தொகையை எழுதிக்கொடுத்து, கொள்முதல் நிலைய பணியாளர்கள், முறைகேட்டில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், தஞ்சை மண்டலத்தில் உள்ள, கொள்முதல் நிலையங்களில், முறைகேட்டில் ஈடுபட்ட, 10 பணியாளர்களை, தஞ்சை கலெக்டர் சுப்பையன், சஸ்பெண்ட் செய்துள்ளார். இதனால், பிற பணியாளர்கள் கலக்கம்

அடைந்துள்ளனர். இது தவிர, நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள், அவ்வப்போது, கொள்முதல் நிலையங்களை கண்காணித்து வருகின்றனர். முறைகேடுகளை களையும் வகையில், விவசாயிகள், புகார்களை, தஞ்சை- 93447 04615, கும்பகோணம் 99767 88168, பட்டுக்கோட்டை- 99653 40907 ஆகிய, மொபைல் எண்களில், நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகளை, தொடர்பு கொண்டு தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என, தஞ்சை கலெக்டர் அறிவித்துள்ளார்.

## 402 கரும்பு விவசாயிகளுக்கு ரூ.3.63 கோடி வழங்கல்

**திருவாலங்காடு,**

கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, கரும்பு அனுப்பிய, 402 விவசாயிகளுக்கு, 3.63 கோடி ரூபாய்க்கான காசோலைகள் நேற்று வழங்கப்பட்டன. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை திருவாலங்காட்டில் இயங்கி வருகிறது. இந்த ஆலைக்கு, 2,725 விவசாயிகள் கரும்புகள் வெட்டி, டிராக்டர், லாரிகள் மூலம் அனுப்பி வருகின்றனர். கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு, ஒரு வாரத்திற்கு ஒரு முறை அவர்களுக்கு உண்டான தொகை காசோலையாக

வழங்கப்படுகிறது. அந்த வகையில், கடந்த டிசம்பர் மாதம், 8ம் தேதி முதல், 15ம் தேதி வரை கரும்பு அனுப்பிய, 402 விவசாயிகளுக்கு, 3.63 கோடி ரூபாய்க்கான காசோலைகளை நேற்று ஆலையின் தலைவர் எத்திராஜ் வழங்கினார். பின்னர் அவர் கூறுகையில், “கடந்த, ஆண்டு அக்.4ம் தேதி முதல், டிச.15ம் தேதி வரை கரும்பு ஓட்டிய விவசாயிகளுக்கு இதுவரை, 32.90 கோடி ரூபாய் ஆலை நிர்வாகம் வழங்கியுள்ளது. மீதமுள்ள வர்களுக்கும் அவர்களுக்கு உண்டான தொகை விரைவில் வழங்கப்படும்," என்றார். அப்போது, உடன் ஆலை மேலாண்மை இயக்குனர் மலர்விழி, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

## ரூ.3 கோடிக்கு பருத்தி ஏலம்

**அவிநாசி,**

அவிநாசியில் கடந்த இரண்டு நாட்களாக நடந்த ஏலத்தில் ரூ.3 கோடிக்கு பருத்தி வர்த்தகம் நடந்தது. அவிநாசி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த இந்த வார ஏலத்துக்கு 13 ஆயிரம் மூட்டைகள் வரத்தாக இருந்தன. இது, கடந்த வாரத்தை விட 1,500 மூட்டைகள் அதிகம். வரத்து அதிகமான நிலையில், அனைத்து ரகங்களின் விலையும் உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஏலத்தில் பருத்தி ரகங்களின் விலை விவரம் (குவிண்டாலுக்கு): டி.சி.எச்., ரூ.7,000 முதல் 7,750 வரை, ஆர்.சி.எச்., பி.டி., மற்றும் பென்னி ரகங்கள் தலா ரூ.5,000 முதல் 5,600 வரை, மட்டம் ரூ.2,700 முதல் 3,100 வரை. சங்க அலுவலர் கூறுகையில், "இந்த வாரம் வரத்து அதிகரித்து விலையும் உயர்ந்தது. திருப்பத்தூர், பொம்மிடி, தர்மபுரி, கோபி, திங்களூர் பகுதிகளை சேர்ந்த 1,240 விவசாயிகள், கோவை, திருப்பூர் உள்ளிட்ட பல பகுதிகளை சேர்ந்த 28 வியாபாரிகள் பங்கேற்றனர். மொத்தம் ரூ.3 கோடிக்கு வர்த்தகம் நடந்தது. வரும் வாரங்களிலும் வர்த்தகம் அதிகரிக்கும்,' என்றார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

**அருப்புக்கோட்டை,**

அருப்புக்கோட்டை கோவிலாங்குளம் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழக அறிவியல் மையத்தில், தோட்ட கலை துறை சார்பில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், சுமார் 40 க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு, தோட்ட கலை தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் பலகலை கழக முனைவர் பால்பாண்டி தலைமை வகித்தார். உதவி பேராசிரியர்கள் தீபாகரன், ஜெகதீஸ்வரி, ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். வேளாண்., துணை இயக்குனர் முத்துமுனியாண்டி, நடமாடும் மண் பரிசோதனை மூத்த அலுவலர் சுப்பாராஜ் பேசினர். தோட்ட கலை துறையின் மானிய திட்டங்கள் குறித்து உதவி இயக்குனர் பூவலிங்கம் விளக்கினார். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் ஜெகதீஸ்குமார் செய்தார்.

## மலை காய்கறியை காப்பாற்ற முயற்சி

மஞ்சூர்கோடை வெயில் தாக்கத்தால் மலை காய்கறிகளுக்கு நீர் பாய்ச்ச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளான பிக்கட்டி, முள்ளிகூர், சிவதி நகர், கொடமர உள்ளிட்ட பகுதிகளில் சிலர் மலை காய்கறி விவசாயம் செய்து வருகின்றனர். நடப்பாண்டில் பிப்ரவரி மாதம் வரைக்கு பனிபொழிவு தென்பட்டதால், தேயிலை தோட்டம், மலை காய்கறி விவசாயம் பாதித்து வருகிறது. மழை பொழிவும் இல்லாததால் தோட்டத்தில் பயிர் செய்த மலை காய்கறி பயிர்களை பாதிக்கப்படுகிறது. நீர் வசதி உள்ள பகுதிகளில் விவசாயிகள் ஸ்பிரிங்ளர் உதவியுடன் மலை காய்கறிக்கு தண்ணீர் பாய்ச்சி பயிர்களை பாதுகாத்து வருகின்றனர்.

## காதலர் தின விற்பனையில் தாண்டிக்குடி கொய்மலர்கள்

**தாண்டிக்குடி,**

காதலர் தினம் என்றால் அன்பை வெளிப்படுத்தும் ரோஜாவே முதலிடம் பிடித்தது. இதற்கு நிகராக கொய்மலர்களும் காதலர்கள் மத்தியில் இடம் பிடித்துவிட்டது. தாண்டிக்குடி மலைப்பகுதியில் நிலவும் சீதோஷ்ண நிலைக்கு ஏற்று கொய்மலர்கள் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் காதலர் தினத்தில் இங்கு உற்பத்தி செய்யப்படும் மலர்களுக்கு அதிக கிராக்கி நிலவுகிறது. தற்போது புதிய வரவாக டான்பெட் ரோ வகை கார்னேசன் பூ, பைஜெட், பர்புல் ஆகியன காதலர்களுக்கு பிடித்தமான மலர்களாக வலம் வருகிறது. காதலர் தினத்தில் அன்பை வெளிப்படுத்தும் ரோஜாவை பயன்படுத்தி காதலர்கள் தற்போது கொய்மலர்களில் கார்னேசன், ஜெர்ப்பரா, லில்லியம், ஆந்தோரியம் வகை மலர்களை விரும்பும் நிலை உருவாகியுள்ளது. வாசமில்லா மலரானாலும் நிறத்தில் அழகுற காட்சியளிப்பதே இவற்றின் தனிச் சிறப்பாகும். இங்கு பறிக்கப்படும் மலர்கள் டெல்லி, பெங்களுரு, மும்பை, சென்னை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்படுகிறது. தற்போது தரமான பூ ஒன்று ரூ.8 முதல் 12 வரை விற்பனையாகிறது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசு குறைப்பு



**நாமக்கல்,**

நாமக்கல்லில் நேற்று, 'தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின்' விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில், பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் முட்டை பண்ணை கொள்முதல் விலையில் 10 காசுகள் குறைக்க முடிவு செய்யப்பட்டது.அதன்படி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 320 காசில் இருந்து 310 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை தொடர்ந்து குறைந்து வருவதால், நாமக்கல் மண்டலத்திலும் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.47, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.65 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**கரும்பு விவசாயிகளுக்கு நிலுவை தொகை வழங்க சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லா கடன்**



புதுடெல்லி,

சர்க்கரை ஆலைகளுக்கு விரைவில் வட்டியில்லா கடன் வழங்கப்படும் என்றும், இதன் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகை கிடைக்கும் என்றும் மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு கோடி கணக்கான ரூபாய் பாக்கி வைத்துள்ளது. நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பணத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையில், பல்வேறு காரணங்களால் இந்த நிலுவைத் தொகையை வழங்கமுடியாமல் சர்க்கரை ஆலைகள் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளன. ஆலைகளுக்கு வங்கிகள் மூலம் வட்டியில்லா கடன் வழங்கவும், இதன் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு பாக்கி தொகை வழங்கவதோடு ஆலைகளும் நெருக்கடியில் இருந்து விடுபடும் என்றும் மத்திய அரசு அறிவித்தது. இதுகுறித்து மத்திய நிதி அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், 'நாடு முழுவதும் கரும்பு விவசாயிகளுக்கு சுமார் ரூ10 ஆயிரம் கோடி வரை சர்க்கரை ஆலைகள் பாக்கி வைத்துள்ளது.

இந்த தொகையை வழங்கவும், ஆலைகள் தொடர்ந்து செயல்படவும் வங்கிகள் மூலம் வட்டியில்லா கடன் ஆலைகளுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளது.

இதுவரை ௫3,500 கோடி அளவிற்கு கடன் உதவி கோரி ஆலைகள் விண்ணப்பம் கொடுத்துள்ளது. தகுதியுள்ள ஆலைகளுக்கு கடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து நடைமுறைகளும் பின்பற்றப் பட்டு வரும் செப்டம்பருக்குள் ஆலைகளுக்கு கடன் வழங்கப்படும். அதன்பின்னர் விவசாயிகளுக்கு ஆலைகள் பாக்கி தொகையை வழங்கும். இந்த செயல்பாடுகள் அனைத்தும் கண்காணித்து உறுதி செய்யப்படும்’ என்றார்.

**துறையூரில் 1 கிலோ பருத்தி ரூ.48.11 க்கு ஏலம்**

**திருச்சி,**

துறையூரில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்தில் கிலோ பருத்தி ரூ.48.11க்கு ஏலம் போனது. இதில் முதல் வாரத்தை விட இந்த வாரம் ரூ.2.11 அதிகரித்துள்ளது.

திருச்சி மாவட்டம் துறையூர் வட்டாரம் துறையூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் கடந்த வாரம் புதனன்று முதல் முறையாக பருத்தி ஏலம் தொடங்கப்பட்டது. இங்கு 2வது முறையாக நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில் மண்ணச்சநல்லூர் வட்டாரம் வலையூர், பெரகம்பி, முசிறி வட்டாரம் கோட்டாத்தூர், துறையூர் வட்டாரம் நாகலாபுரம் மற்றும் உப்பலியபுரம் வட்டாரம் மங்கப்பட்டி ஆகிய கிராமங்களில் இருந்து விவசாயிகள் பருத்தியை ஏலம் விடுவதற்காக கொண்டு வந்தனர். நாமக்கல், பெரம்பலூர், பெரகம்பி ஆகிய ஊர்களில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். இதில் 33 விவசாயிகள் மூலம் 33 குவியல்கள் பருத்தி ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டது. ஒரு கிலோ பருத்தி ரூ.48.11 காசுக்கு ஏலம் போனது.

பருத்தி ஏலத்திற்கான ஏற்பாடுகளை திருச்சி விற்பனை குழு செயலர் கந்தசாமி தலைமையில் உரிமை இட ஆய்வாளர் கோவிந்தசாமி, களகண் காணிப்பாளர் கோவிந்தராஜன், தலைமை அலுவலக மேற்பார்பார்வையாளர் கமலக்கண்ணன், துறையூர் ஒழங்கு முறை விற்பனை கூட மேற்பார்வையாளர் கணேசன் மற்றும் அலுவலக உதவியாளர் பாஸ்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

இது குறித்து திருச்சி மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (வணிகம்)

சந்திரசேகரன் கூறுகையில், ஒவ்வொரு புதன் அன்றும் துறையூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் நடைபெறும். பருத்தி ஏலம் விடுவது பற்றி வேளாண் விற்பனை வாரிய தகவல் அலுவலர் பிரபாகரன், மண்ணச்சநல்லூர், முசிறி, துறையூர் மற்றும் உப்பிலியபுரம் வட்டாரங்களில் விவசாயிகள் இடையே பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். வேளாண் வணிக மற்றும் விற்பனை துறை உதவி வேளாண் அலுவலர்கள் ராஜு , ஜெயக்குமார் ஆகியோர், விவசாயிகள் பருத்தி கொண்டு வர ஏற்பாடு செய்து வருகின்றனர்.

கடந்த வாரம் நடந்த பருத்தி ஏலத்தில் மொத்தம் 20 விவசாயிகள் மூலம் 20 குவியல்கள் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டது. மொத்தம் 79 சாக்குகள் கொண்டு வந்ததில் சராசரி ஒரு கிலோ ரூ.46க்கு ஏலம் போனது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் கிலோ விற்கு ரூ.2.11 காசு அதிகரித்துள்ளது என்றார்.

**கோ6, வம்பன்6 உளுந்து ரகம் இயந்திர அறுவடைக்கு ஏற்றது பயிற்சி முகாமில் கல்லூரி முதல்வர் தகவல்**

**திருச்சி,**

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் பயறு வகை பயிர்களின் நவீன சாகுபடி குறித்த விவசாயிகளுக் கான பயிற்சி முகாம் குமு ளூர் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலை யம் சார்பில் லால்குடியில் நடந்தது.

பயிற்சி முகாமை கல் லூரி முதல்வர் ராமசாமி தொடங்கி வைத்து பேசியதாவது: தமிழ்நாட்டில் பயிறு வகை பயிர்களின் உற்பத்தி குறைவதற்கான காரணம் குறைவான பயிர் எண்ணிக்கை, வேலை ஆட்கள் மூலம் அறுவடை செய்யும் சிரமங்கள் மற்றும் மஞ்சள் தேமல் நோய் தாக்கம் போன்றவை யாகும்.

இக்குறைகளை போக்கும் வண்ணம், தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் குறிப்பாக மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்பு சக்தி கொண்ட ஒரே சமயத்தில் முதிர்ந்து இயந்திரங்கள் மூலம் அறு வடை செய்யக்கூடிய பயறுவகை பயிர்களை அறிமுகப்படுத்தி இருக்கிறது. இதில் குறிப்பாக உளுந்தில் கோ6 மற்றும் வம்பன் 6 என்ற ரகங்கள் அறுவடை செய்ய ஏற்றது என்றார்.உழவியல் துறை பேராசிரியர் கதிரேசன் பேசு கையில், கோ6, வம்பன் 6 ஆகிய உளுந்து ரகங்கள் 60 முதல் 70

நாட்களில் ஒரே சமயத்தில் முதிர்ந்து எக்டருக்கு 800 முதல் 900 கிலோ மகசூல் தரவல்லது என் றார். உழவியல் துறை உதவி பேராசிரியர் சோமசுந்தரம், பண்ணை இயந்திரவியல் உதவி பேராசிரியர் சுதாகர் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். பயிற்சி முகாமில், லால்குடி உழவர் மன்ற தலைவர் முத்தமிழ்செல் வன், முன்னணி விவசாயி ராஜகோபால் மற்றும் ஏரா ளமான விவசாயிகள், விவசாய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**மண் பரிசோதனையா? வழிகாட்டுது வேளாண்துறை**

**பழநி,**

மண் பரிசோ னை மேற்கொள்ளும் முறை குறித்து வேளாண்துறையினர் விடுத்துள்ள பத்திரிக்கை குறிப்பில் கூறியிருப்பதாவது:

மண் மாதிரி மண் ஆய்வுக்கு அரை கிலோ மண் கொடுத்தால்போதும். அந்த அரை கிலோ மண் குறிப்பிட்ட நிலத்திற்கு சரியான மாதிரியாக இருந்தால்தான் நிலத்தின் உண்மையான வளம் தெரியும். மண் மாதிரி எடுக்கும்போது ஒவ்வொரு முறை பயிர் செய்வதற்கு முன்பும் மண் பரிசோதனை செய்ய வேண்டும்.

ஒரு பயிர் அறுவடை செய்த பின்பும் அடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன்பும் உள்ள இடைபப்ட்ட காலத்தில்தான் மண் மாதிரி எடுக்க வேண்டும். ஒரு நிலத்தின் மண் வெவ்வேறாக இருந்தால் தனித் தனியாக மாதிரி எடுக்க வேண்டும். எரு குவித்த இடம், வரப்பு வாய்க்கால் அருகில் மற்றும் மர நிழலில் மாதிரி எடுக்கக் கூடாது. ஒவ்வொரு வயலுக்கும் தனித்தனியே மாதிரி எடுக்க வேண்டும்.

மண்மாதிரி எடுக்கப் படும் இடத்திலுள்ள இலை, சருகு, புல், ஆகியவைகளை மேல் மண்ணை செதுக்காமல் அப்புறப்படுத்த வேண்டும்.

நெல், கேழ்வரகு போன்ற தானியப்பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளுக்கு அரை அடி ஆழமும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறி பயிர்களுக்கு முக்கால் அடியும், தென்னைக்கு 3 அடியும், மா, சப்போட்டா போன்ற பழ மரங்களுக்கு 6 அடி ஆழத்தில் குழி வெட்டி அடுக்கு வாரியாக, தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும். காலப்பயிர்களுக்கு ‘வி‘ வடிவில் குழி வெட்ட வேண்டும். வெட்டிய குழியின் இரு ஓரங்களிலும் மண்வெட்டியின் தகட்டால் மேலிருந்து கீழ்

வரை 1 சென்டி மீட்டர் கனத்திற்கு சீராக மண்ணை சுரண்டி எடுத்து சேகரிக்க வேண்டும். இதுபோல் 1 ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் மண் சேகரித்து அதை சுத்தமான பிளாஸ்டிக் பை அல்லது சாக்கில் கொட்டி, நன்றாக கலந்து கல், கண்ணாடி, வேர் தண்டுகளை அப்புறப்படுத்த வேண்டும். பின்பு, நான்கு சம போக முறையில் அரைக்கிலோ மண்ணை எடுத்து துணிப்பையில் போட்டுக் கட்ட வேண்டும்.

மண் மாதிரியுடன் விவசாயின் பெயர் மற்றும் அஞ்சல் முகவரி, கிராமத்தின் பெயர், நிலத்தின் பெயர், இறவை அல்லது மானாவாரி, பயிரிடப்பட்ட முன்பயிர் அடுத்து பயிரிடப் போகும் பயிர் பிரச்சனை இருப்பின் அதன் விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**கோடைகால பயிர்கள் சாகுபடி முகாம்**

**கிருஷ்ணராயபுரம்,**

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டாரம் கட்டளை கிராமத்தில் தமிழக முதல்வரின் உணவு தானிய இயக்க திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான கோடைகால பயிர்கள் சாகுபடி முகாம் வேளாண்மை துறையால் நடத்தப்பட்டது. ரெங்கநாதபுரம் கிராம தலைவர் சுமத்ராதேவி தலைமை வகித்தார். முகாமில், கரூர் மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் மதனகோபால், கோடைகாலத்தில் நெல் மற்றும் பயறுவகைகள் சாகுபடி குறித்தும், அதன் பயன்கள் குறித்து விரிவாக பேசினார். கிருஷ்ணராயபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பாலகிருஷ்ணன் பேசும்போது, கோடைகாலத்தில் பயிர் சாகுபடி செய்வதன் அவசியம் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்தும், அதற்கான செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் கூறினார். விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். முகாமில் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு துறை அதிகாரிகள் பதிலளித்தனர். வேளாண்மை அலுவலர் ராஜீ, துணை வேளாண்மை அலுவலர் ராமவேலு மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டு சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து

பேசினர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் புவனேஸ்வரன் செய்திருந்தார்.

**வறட்சி வாட்டினாலும் வாழை இலை விலை உயர்வு**

**தேவதானப்பட்டி,** : தேவதானப்பட்டி பகுதியில் வாழை இலை கட்டு விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
தேவதானப்பட்டி பகுதியில் கெங்குவார்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, குள்ளப்புரம், சில்வார்பட்டி, நல்லகருப்பன்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் பெருமளவில் வாழை சாகுபடி நடந்து வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், இந்த ஆண்டு குறைந்த அளவே வாழை சாகுபடி செய்யப்பட்டது. கடந்த சில நாட்களாக முகூர்த்த நாட்களின் அதிகரிப்பால் வாலை இலைக்கட்டின் விலை உயர்ந்து வருகிறது.
தேவதானப்பட்டி பகுதியில் இருந்து வாழை இலைகளை வத்தலக்குண்டு கமிஷன் கடைக்கு விவசாயிகள் கொண்டு செல்வர். அங்கிருந்து வியாபாரிகள் ஏலத்தில் எடுத்து சென்னை, பெங்களூரு, ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வர். தற்போது கடுமையான வறட்சி நிலவுவதால் வாழை இலை கட்டின் விலை உயர்ந்துள்ளது. நேற்றுமுன்தினம் இரவு கமிஷன் கடையில் 200இலைகள் எண்ணிக்கை கொண்ட கட்டு ஒன்று ரூ.2 ஆயிரம் முதல் ரூ.3,500 வரை விலை போனது. இனி வரும் முகூர்த்த மாதங்களில் ரூ.5ஆயிரம் வரை விலை போகும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். ஜெயமங்கலத்தைச் சேர்ந்த விவசாயி கூறுகையில், 'தற்போது கடுமையான வறட்சி நிலவுவதால் வாழைக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் மிகவும் சிரமப்படுகிறோம். சராசரியாக அறுவடைக்கு 10 கட்டு வாழை இலை கிடைக்கும் இடத்தில் தற்போது 2 கட்டுதான் கிடைக்கிறது. வறட்சி அதிகரிக்க, அதிகரிக்க இலைக்கட்டின் விலை இன்னும் அதிகரிக்கும்' என்றார்.

**உற்பத்தியை பெருக்கினால் மட்டும் சாதனை என்று கூற முடியாது**

**விருத்தாசலம்,**

விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் முந்திரி சாகுபடி கருத்தரங்கு நடந்தது. ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி

நிலைய தலைவர் மற்றும் இயக்குநர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சந்திரமோகன் முன்னிலை வகித் தார். மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் புருஷோத்தமன் வரவேற்றார்.
கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக்கழக வாசனை மற்றும் மலைத் தோட்டப்பயிர்கள் துறை பேராசிரியர் ஜான்சிராணி, தோட்டக்கலை துணை இயக்குநர் ராமலிங்கம், மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ஜீவா ஆகியோர் கலந்து கொண்டு முந்திரி சாகுபடி குறித்து விளக்கி பேசினார்கள்.
இதில், முந்திரி உற்பத்தியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த குறிப்பேட்டை ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ராஜேந்திரன் வெளியிட்டு பேசும் போது, விவசாயத்தில் உற்பத்தியை பெருக்கினால் மட்டும் சாதனை என்று கூற முடியாது. விவசாயிகளின் வாழ்வாதாரம் நன்றாக இருத்தல் வேண்டும். நாடு வேளாண் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதுடன், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும். முந்திரியை பொறுத்த வரையில் அதன் ஒவ்வொரு பாகத்திற்கும் மதிப்புகள் உள்ளது. விவசாயிகள் அதை முறையாக சந்தைப்படுத்தி, உரிய லாபத்தை அடைய வேண்டும். புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்க்கையில் உற்பத்தியில் நாம் பின் தங்கி உள்ளோம்.
கடலூர் மாவட்டம் முந்திரி பயிர் செய்ய வாய்ப்புள்ள மாவட்டமாகும், எனவே, அதிகளவில் சாகு படி செய்து உற்பத்தியை பெருக செய்யலாம். அதோடு தற்போது நிலவும் தண்ணீர் தட்டுப்பாட்டிற்கு குறைந்த தண்ணீர் தேவையுடைய முந்திரியை விவசாயிகள் பயன்படுத்தலாம், என்றார்.

**திருமானூர் அருகே புதிய கால்நடை மருந்தகம் திறப்பு எம்எல்ஏ பங்கேற்பு**

**திருமானூர்,**

திருமானூர் அடுத்த வெங்கனூர் ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகத்தை எம்எல்ஏ துரை. மணிவேல் துவக்கி வைத்தார்.
அரியலூர் மாவட்டம் திருமானூர் அடுத்த வெங்கனூரில் புதிய கால்நடை மருந்தக துவக்க விழா நடைபெற்றது. ஊராட்சி தலைவர் மணிமாறன் வரவேற்றார். கால்

நடைத்துறை மண்டல இணை இயக்குனர் சந்திரசேகரன் முன்னிலை வகித்தார். கலெக்டர் சரவணவேல் ராஜ் தலைமை வகித்தார். எம்எல்ஏ துரை.மணிவேல் மருந்தகத்தை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றியக்குழு தலைவர் சீனிவாசன், ஒன்றியக் குழு துணைத் தலைவர் குமரவேல், மாவட்ட கவுன்சிலர் இந்திராகாந்தி, கவுன்சிலர் ரவி, ஆர்டிஓ கணபதி, தாசில்தார் முருகன், குருவாடி ஊராட்சி தலைவர்கள் முருகேசன், சாமி துரை, லெட்சுமி கோவிந்தராசு , பிடிஓ ராஜேந்திரன், கவுன்சிலர் சரவணன், வார்டு உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொ ண்டனர். கால்நடைஉதவி மருத்துவர் செந்தாமரை நன்றிகூறினார்.

**நீர்வடிப் பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர் பட்டதாரிகள் விண்ணப்பிக்க அழைப்பு**

**பெரம்பலூர்,**

நீர்வடிப் பகுதி வளர்ச்சிஅணி உறுப்பினர்களாக பணிபுரிய ஆர்வமுடையோர் 17ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.இது குறித்து கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்துள்ளதாவது;பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீர்வடிப்பகுதியில் நீர்வடிப்பகுதி வளர்ச்சிஅணி உறுப்பினராகப் பணிபுரிய பொறியியல் (வேளாண்மை (ம) சிவில்) சமூகவியல், வேளாண்மை படித்த பட்டதாரிகள் மற்றும் அனுபவமுள்ள பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

தற்காலிக பணிஇடத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு அரசு விதிகளின்படி மதிப்பூதியம் வழங்கப்படும். இப்பணியில் சேர ஆர்வமுடையோர் தங்களது விண்ணப் பங்களை வரும் 17ம் தேதிக்குள் திட்டஅலுவலர் மற்றும் வேளாண்மை இணை இயக் குநர், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுமுகமை, 175/பி, 2வது குறுக்குத்தெரு, ராஜா நகர், துறைமங்கலம், பெரம்பலூர்-621220 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். 21ம் தேதி காலை 11 மணிக்கு வேளாண்மை இணை

இயக்குநர் அலுவல கத்தில் நேர்காணல் நடைபெறும். தகுதியுடையோர் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**மதகடிப்பட்டில் மாட்டு சந்தை விற்பனை அமோகம்**

**திருபுவனை,**

திருபுவனை அடுத்த மதகடிப்பட்டில் வாரம்தோறும் செவ்வாயன்று மாட்டு சந்தை நடப்பது வழக்கம். இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்குவதால் மாட்டு சந்தைக்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் கடந்த மாதம் மாட்டு சந்தைக்கான தடை விலக்கிக் கொள்ளப்பட்டது. ஆனால் மாடுகள் சந்தைக்கு குறைந்த அளவே வந்து கொண்டிருந் தன. எனவே நேற்று நடந்த சந்தையில் மாடுகள் வழக்கத்துக்கு மாறாக அதிக அளவில் விற்பனைக்கு வந்தது. இதனால் மாட்டு சந்தை களை கட்டியது. மாடுகள் அதிக அளவில் வந்ததால் கயிறு விற்பனையும் அமோகமாக நடந்தது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகத்தில் உள்ள நதிகளை இணைக்க ரூ.119.98 கோடி நிதி ஒதுக்கீடு**



**சென்னை,**

தமிழ்நாடு சட்டசபையில் 2014–15–ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை (பட்ஜெட்) நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்து பேசினார்.

அப்போது தமிழகத்தில் உள்ள நதிகளை இணைக்க ரூ.119.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**12 ஆயிரம் பேருக்கு கறவை மாடுகள்: 1½ லட்சம் பேருக்கு விலையில்லா ஆடுகள்; பட்ஜெட்டில் தகவல்**



**சென்னை,**

12 ஆயிரம் பேருக்கு கறவை மாடுகளும், 1½ லட்சம் பேருக்கு விலையில்லா ஆடுகளும் வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு உள்ளது.

நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்த பட்ஜெட்டில் கூறப்பட்டு இருப்பதாவது:–

<u>நவீன கரும்பு சாகுபடி</u>

நெல், கரும்பு, பருத்தி, பயிறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற முக்கிய பயிர்களின் உற்பத்தி திறன் உயர்ந்து வருகிறது. விவசாயிகளின் வருவாயையும் உயர்த்துவதற்காக இந்த ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ்

323 கோடி ரூபாய் செலவில் பல்வேறு துணைத்திட்டங்கள் செயல்படுத்தப்படும். 2014–15–ம் இந்த ஆண்டில், திருந்திய நெல் சாகுபடி முறை, மேலும் மூன்று லட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு விரிவுபடுத்தப்படும். வரும் நிதியாண்டில், நவீன கரும்பு சாகுபடி முறை மேலும் 12 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவிற்கு விரிவுபடுத்தப்படும்.

சர்க்கரை ஆலைகளுடன் இணைந்து கரும்பு விவசாயிகளிடையே இந்த சாகுபடி முறையையும், சொட்டுநீர் பாசன முறையையும் பிரபலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 97,813 ஏக்கராக இருக்கும் நாற்று நடவு துவரை சாகுபடியின் பரப்பளவு, 2014–15–ம் நிதியாண்டில் 1.3 லட்சம் ஏக்கராக உயர்த்தப்படும். இதுபோல் 9 ஆயிரத்து 905 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட துல்லிய பண்ணை சாகுபடி, 11ஆயிரம் ஏக்கர் பரப்பளவிற்கு விரிவுபடுத்தப்படும்.

வேளாண் எந்திரமயமாக்கல் திட்டம்

நீர்ப்பயன்பாட்டு திறனை உயர்த்துவதற்காக, நீர்வள நிலவள திட்டம், தேசிய நுண்ணீர் பாசன இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் ஆகியவற்றுடன் மாநில அரசு நிதியையும் ஒருங்கிணைத்து 400 கோடி ரூபாய் செலவில் 1.30 லட்சம் ஏக்கர் பரப்பளவு நுண்ணீர் பாசனத்தின் கீழ் கொண்டுவரப்படும். வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்கவும், வேளாண் பணிகளுக்கான செலவினத்தைக் குறைக்கவும், வேளாண் எந்திரமயமாக்கல் திட்டத்துக்காக 100 கோடி ரூபாய் செலவிடப்படும்.

விவசாயிகளின் வருவாயை உயர்த்தும் நோக்கத்துடன் 22 மாவட்டங்களில் 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேசியத் தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்படும். எஞ்சியுள்ள மாவட்டங்களில், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் நிதியை பயன்படுத்தி, தோட்டப்பயிர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விவசாயிகள் காப்பீட்டு தொகை

இதுவரை செயல்படுத்தப்பட்டு வந்த தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்திற்கு பதிலாக, மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தையோ அல்லது பருவ நிலை அடிப்படையிலான பயிர்க்காப்பீட்டு திட்டத்தையோ செயல்படுத்த மத்திய அரசு எடுத்துள்ள ஒருதலைப்பட்சமான முடிவால், விவசாயிகள் அதிக காப்பீட்டு தொகையை செலுத்த வேண்டிய நிலை உருவாகி, பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.

விவசாயிகளின் இந்த கூடுதல் சுமையை குறைத்திடும் வகையில், கூடுதல் காப்பீட்டு தொகையை மத்திய அரசு, மாநில அரசுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில், பயிர் காப்பீட்டிற்காக 242.54 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பயிர்க்கடன்

நமது மாநிலத்தில் உள்ள ஆயிரத்து 948 நூற்பாலைகளுக்கு ஆண்டுதோறும் 110 லட்சம் பருத்தி பேல்கள் தேவைப்படுகின்றன. நமது மாநிலத்தில் பருத்தி உற்பத்தி போதிய அளவில் இல்லாத காரணத்தால், தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் என்ற ஒரு பெருந்திட்டம் தொடங்கப்படும். மத்திய அரசின் பருத்தி தொழில்நுட்ப இயக்கத்தில் உள்ள நிதியும் இந்த மாநில இயக்கத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

2014–15–ம் ஆண்டில் கூட்டுறவு அமைப்புகளுக்கான பயிர்க்கடன் இலக்கு முன் எப்போதும் இருந்திராத அளவாக 5 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்படும். பயிர்க்கடனை குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு, வட்டியில்லா கடன் வழங்குவதற்கான முழு வட்டி சலுகையை இந்த அரசு அளித்து வருகிறது. 2014–15–ம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில், இந்த வட்டி சலுகைக்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விலையில்லா ஆடு, மாடுகள்

கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளியோருக்கு விலையில்லா கறவை பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்கும் புதுமையான திட்டம் மூலம், வரும் நிதியாண்டில் 43.65 கோடி ரூபாய் செலவில் மேலும் 12 ஆயிரம் பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கப்படும். அதேபோல், 1.5 லட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் வழங்கப்படும். இதற்கென, இந்த வரவு செலவு திட்டத்தில் 198.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் 100 கால்நடை துணை மையங்கள், குறிப்பாக பின்தங்கிய மாவட்டங்களில், கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்படும். 80.05 கோடி ரூபாய் செலவில் 227 புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.15 மாவட்டங்களில் கால்நடை காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடை இறப்பின்போது விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய, மற்ற அனைத்து மாவட்டங்களுக்கும் வரும் நிதியாண்டில் 12 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் விரிவுபடுத்தப்படும். தமிழ்நாட்டில் இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் கனவு நனவாகியுள்ளது. இதன் விளைவாக, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகளின் பால் கொள்முதல் அளவு உயர்ந்துள்ளது.

இவ்வாறு பட்ஜெட்டில் கூறப்பட்டு உள்ளது.

**ஒரு டன் மூலச்சர்க்கரைக்கு ரூ.3,333 ஏற்றுமதி மானியம் மத்திய அரசு ஒப்புதல்**



**புதுடெல்லி,**

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒரு டன் மூலச்சர்க்கரை ஏற்றுமதிக்கு ரூ.3,333 மானியம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. 40 லட்சம் டன் வரையிலான மூலச்சர்க்கரை ஏற்றுமதிக்கு இந்த மானியம் வழங்கப்படும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.ரூ.80,000 கோடி சந்தை மதிப்பு கொண்ட சர்க்கரை துறை நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. உற்பத்திச் செலவு அதிகரிப்பு, கையிருப்பு அதிகரிப்பால் அடக்கவிலைக்கும் குறைவாக விற்பனை செய்வது போன்றவற்றால் இத்துறை நிறுவனங்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகள் மற்றும் சர்க்கரை நிறுவனங்களின் பிரச்சனைகளை ஆய்வு செய்து உரிய தீர்வுகள் வழங்க சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் ப.சிதம்பரம் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்றை பிரதமர் அமைத்தார்.மூலச்சர்க்கரை ஏற்றுமதியில் ஒரு டன்னுக்கு ரூ.2,000 மானியம் வழங்கலாம் என மத்திய அமைச்சரவைக் குழுவிடம் உணவு அமைச்சகம் என பரிந்துரை செய்திருந்தது. அதே சமயம் விவசாய அமைச்சகம் ரூ.3,500 மானியம் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தது. இந்நிலையில் ரூ.3,333 மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அன்னியச் செலாவணி மாற்று மதிப்பிற்கு ஏற்ப இந்த மானியம் கணக்கிட்டு வழங்கப்படும் என தெரிகிறது.அரசு தற்போது அறிவித்துள்ள மானியம் நிலுவைத் தொகையில் கணிசமான ஒரு பகுதியை விவசாயிகளுக்கு வழங்க ஆலைகளுக்கு உதவியாக இருக்கும் என இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம்தெரிவித்துள்ளது.

**நாமக்கல்லில் 6,500 மூட்டை பருத்தி ரூ.1½ கோடிக்கு ஏலம்**



ஏலத்திற்கு அடுக்கி வைக்கப்பட்டு இருந்த பருத்தி மூட்டைகளை படத்தில் காணலாம்.

**நாமக்கல்,**

நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 6 ஆயிரத்து 500 மூட்டை பருத்தி ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது.

<u>பருத்தி ஏலம்</u>

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்கத்தின் தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது.இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ 6 ஆயிரத்து 500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

<u>ரூ.1½ கோடிக்கு விற்பனை</u>

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 860 முதல் ரூ.5 ஆயிரத்து 495 வரைக்கும், டி.சி.எச். ரக பருத்தி முதல் தரம் ரூ.6 ஆயிரத்து 700 முதல் ரூ.7 ஆயிரத்து 429 வரைக்கும், 2-ம் தரம் ரூ.5 ஆயிரத்து 196 முதல் ரூ.6 ஆயிரத்து 610 வரைக்கும், சுரபி ரக பருத்தி ரூ.6 ஆயிரத்து 400 முதல் ரூ.7 ஆயிரத்து 96 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை ஒரே நாளில் 10 காசுகள் சரிவு 310 காசுகளாக நிர்ணயம்**



**நாமக்கல்,**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று ஒரே நாளில் 10 காசுகள் சரிவடைந்து, 310 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை சரிவு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 320 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 10 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 310 காசுகளாக குறைந்து உள்ளது.

பிறமண்டலம்

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:–

சென்னை–355, ஐதராபாத்–310, விஜயவாடா, தனுகு–310, பார்வாலா–292, மும்பை–348, மைசூர்–347, பெங்களூர்–335, கொல்கத்தா–335, டெல்லி–313.

கறிக்கோழி கிலோ ரூ.65–க்கும், முட்டைக்கோழி கிலோ ரூ.54–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

வடமாநிலங்களில் முட்டை விற்பனை சரிவடைந்து வருவதால், பிற மண்டலங்களில் முட்டை விலை குறைந்து வருகிறது. அதற்கு தகுந்தாற்போல் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை குறைக்கப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். தமிழகத்தில் காய்கறி விலை குறைந்து உள்ளதும், முட்டை விலை குறைப்புக்கு ஒரு காரணம் என கூறப்படுகிறது.

**பொள்ளாச்சியில் காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்க திட்டம் நகராட்சி தலைவர் தலைமையில் பூமிபூஜை**



**பொள்ளாச்சி,**

பொள்ளாச்சியில் காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்க நகராட்சி தலைவர் கிருஷ்ணகுமார் தலைமையில் பூமிபூஜை நடைபெற்றது.

<u>காய்கறி கழிவுகள்</u>

பொள்ளாச்சி நகராட்சியில் உள்ள 36–வது வார்டுகளில் இருந்தும் சேகரிக்கப்படும் குப்பைகள், பிளாஸ்டிக் மூலம் மண்புழு தயாரிக்கப்பட்டு வருகிறது. இதையடுத்து காய் கறி, பழங்கள், மனித கழிவு களில் இருந்து மின்சாரம் தயாரிக்க நகராட்சி திட்ட மிட்டு உள்ளது. பொள்ளாச்சி யில் உள்ள திரு.வி.க. மார்க் கெட், காந்தி

மார்க்கெட், தேர் நிலை மார்க்கெட் ஆகிய 3 பகுதி களில் இருந்தும் தினமும் 5 டன் மக்கும் கழிவுகள் சேகரிக்கப்படுகிறது.

இந்த கழிவுகளில் இருந்து இயற்கை எரிவாயு (பயோ கியாஸ்) தயாரிக்க மாட்டு சந்தை அருகே 500 சென்ட் பரப் பளவில் இடம் ஒதுக்கப் பட்டு உள்ளது. இதற் காக ரூ.1 கோடி அரசு மானியம் வழங்கி உள்ளது.

பூமிபூஜை

பொள்ளாச்சி காந்தி மார்க் கெட்டில் காய்கறிகழிவு களில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு பூமிபூஜை நடை பெற்றது. நிகழ்ச்சிக்கு கமிஷனர் சுந்தராம்பாள் முன்னிலை வகித்தார். நகராட்சி தலைவர் கிருஷ்ணகுமார் தலைமை தாங்கி பூமிபூஜையை தொடங்கி வைத்தார்.

இதில் என்ஜீனியர் ராஜா, கவுன்சிலர்கள் ஜேம்ஸ்ராஜா, வசந்த் மற்றும் நகராட்சி அதிகாரிகள் கலந்து கொண் டனர்.

மின்சாரம் தயாரிக்க திட்டம்

இது குறித்து நகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:–

மார்க்கெட்டுகளில் இருந்து சேகரிக்கப்படும் காய்கறி, பழக் கழிவுகளை கொண்டு, அதில் இருந்து கார்பன்–டை– ஆக் சைடை பிரித்து எடுக்கப் படுகிறது. அதன்பின்னர் கிடைக்கும் சுத்தமான மீத் தேனை எடுத்து ஜென ரேட்டர் இயக்கப்பட்டு, அதன் மூலம் மின்சாரம் தயாரிக்கப்படு கிறது. இந்த பணிகளை 3 மாதத்தில் முடிக்க திட்டமிட்டு உள்ளது. இதேபோன்று மனித கழிவு களில் இருந்து மின்சாரம் தயாரிக்க நகராட்சி மூலம் ரூ.20 லட்சம் ஒதுக்கீடு செய் யப்பட்டு உள்ளது. இதற்காக பொள்ளாச்சி பஸ் நிலையம் அருகில் இடம் தேர்வு செய் யப்பட்டு உள்ளது. கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் மின் சாரம் முழுவதும் நகராட்சி தேவைக்கு பயன்படுத்தப்படும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**பீன்ஸ் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**



**கொலக்கம்பை,**

தேயிலைக்கு விலை கிடைக்காததால் பீன்ஸ் சாகுபடி செய்ய தற்போது விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தேயிலை விலை வீழ்ச்சி

நீலகிரி மாவட்டத்தில் பிர தான தொழிலாக தேயிலை விவசாயம் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. ஆனால் பச்சை தேயிலைக்கு கடந்த சில வருடங்களாக போதிய விலை கிடைக்க வில்லை. இதன் காரணமாக இதனை நம்பி உள்ள சிறு, குறு தேயிலை விவசாயிகள் மற்றும் தொழி லாளர்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகின்றனர்.இதையடுத்து, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மாற்று பயிர் செய்ய முடிவு செய்தனர். இதன்படி பல விவசாயிகள் மலைத்தோட்ட காய்கறி பயிர் களான கேரட், உருளைக் கிழங்கு, கோஸ், பீன்ஸ், மேரக் காய் உள்ளிட்ட காய்கறிகளை தேயிலை தோட்டங்களில் ஊடு பயிராக பயிரிட்டு வரு கின்றனர்.

காய்கறிகள்

இதன் படி கொலக்கம்பை, தூதூர்மட்டம், கிளிஞ்சடா, கரும்பாலம், கெந்தளா, கசோலை உள்ளிட்ட பகுதி களில் சுமார் ஆயிரம் ஹெக் டேர் பரப்பளவில் மலைத்

தோட்ட காய்கறிகளை விவ சாயிகள் பயிரிட்டு உள்ளனர். இதன் மூலம் ஆண்டுதோறும் கணிசமான முறையில் வரு மானம் பெற்று வருகின்ற னர்.

இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக இந்த பகுதியில் பகல் நேரங்களில் சமவெளி பகுதிகளுக்கு ஈடாக கடுமை யான வெயிலும், இரவு நேரங் களில் உறைப்பனி பொழிவும் நிலவி வருகிறது. இதனால் நீரோடைகள் மற்றும் நீருற்றுகளில் தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகி றது.

பீன்ஸ் பயிரிடும் விவசாயிகள்

இந்த நிலையில் தூதூர் மட்டம் பகுதியில் உள்ள விவசாயிகள் பீன்ஸ் பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர். கோடை காலம் தொடங்கி உள்ள நிலையில் விவசாய நிலங்களில் நடவு செய்யப்பட்டு உள்ள பீன்ஸ் பயிர்களுக்கு அந்த பகுதியில் உள்ள நீரோ டைகளில் வரும் குறைந்த அளவு தண்ணீரை தேக்கி வைத்து மோட்டார் மூலம் விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

தற்போது நடவு செய்யப் பட்டு உள்ள பீன்ஸ் பயிர்கள் வரும் ஏப்ரல் மாதம் அறு வடைக்கு தயாராகும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரி வித்து உள்ளனர்.

**மங்களூர் பகுதியில் மஞ்சள் அறுவடைக்கு தயார் நிலை**



**சிறுபாக்கம்,** மங்களூர் ஒன்றியத்தில் உள்ள நீர் பாசன விவசாயிகள், ஒருவருட பணப்பயிரான மஞ்சளை பயிர் செய்திருந்தனர். இதில் கோ–1 நாட்டுரகம்,

எருமதளி ஆகிய ரகங்களை பயிரிட்டுள்ளனர். நடப்பு ஆண்டை பொறுத்த வரையில் சுமார் 600 எக்டர் வரையில் பயிர் செய்துள்ளார்கள்.

தற்போது இந்த பயிர்கள் அனைத்தும் அறுவடைக்கு தயாராகி உள்ளது. மருத்துவ மூலிகைகளின் ஒன்றாக விளங்கும் மஞ்சள் செடியின் கிழங்கு நறுமணப் பொருள் தயார் செய்ய பயன்படுத்தப்படுவதற்காக ஈரோட்டிற்கு எடுத்து செல்லப்படும்.

ஒரு ஏக்கருக்கு 15 முதல் 20 குவிண்டால் வரையில் மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். இதன் விலையானது குவிண்டாலுக்கு 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் வரையில் விலைபோகும் என்று எதிர்நோக்கி உள்ளனர். அதோடு ஈரோட்டிற்கு எடுத்து செல்லும் மஞ்சள் கிழங்கை அங்குள்ள அரசுக்கு சொந்தமான மஞ்சள் குடோனில் இருப்பு வைத்து, சந்தை விலைக்கு ஏற்ப விற்கவும் விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர்.

**கள்ளக்குறிச்சி கால்நடைத்துறை அலுவலகத்தில் 75 சதவீத மானியத்தில் தீவன புல் வெட்டும் கருவி**



**கள்ளக்குறிச்சி,**

கள்ளக்குறிச்சி கால்நடைத்துறை அலுவலகத்தில் 75 சதவீத மானியத்துடன் தீவன புல் வெட்டும் கருவி விவசாயிகளுக்கு வழங்க தயார் நிலையில் உள்ளது.

<u>தீவன புல் வெட்டும் கருவி</u>

கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள், கால்நடை வளர்ப்பவர்களுக்கு மின் சக்தியில் தீவன புல் வெட்டும் கருவி கால்நடைத்துறை மூலம் ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது. இந்த ஆண்டுக்கான கருவி விரைவில் வழங்கப்பட இருக்கிறது. இதற்கான பயனாளிகள் தேர்வு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் தீவன புல் வெட்டும் கருவி நேற்று கள்ளக்குறிச்சி கால்நடைத் துறை உதவி இயக்குனர் அலுவலகத்துக்கு வந்தது. இதை தொழிலாளர்கள் மூலம் பொருத்தும் பணி மும்முரமாக நடைபெற்றது.

75 சதவீத மானியம்

இப்பணியை கால்நடை பராமரிப்புத்துறை விழுப்புரம் மண்டல இணை இயக்குனர் தேவராஜன், கள்ளக்குறிச்சி உதவி இயக்குனர் ராஜேந்திரன் ஆகியோர் பார்வையிட்டனர். அப்போது அவர்கள் கூறுகையில், விவசாயிகள் கால்நடைகளுக்கு எளிதில் தீவனம் வழங்கும் வகையில் ரூ.17 ஆயிரம் மதிப்பிலான இந்த கருவி 75 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது என்றனர்.

**சூரியகாந்தி பூக்கள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**



**மேல்மலையனூர்,**

மேல்மலையனூர் பகுதியில் சூரியகாந்தி பூக்கள் பயிரிடுவதில் விவ சாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>சூரியகாந்தி பயிர்</u>

சமையலுக்கு பயன்படும் எண்ணெய்களில் பலவிதம் இருந்தாலும், சூரியகாந்தி பூக்களின் மூலம் பெறப்படும் எண்ணெய் மிகவும் சிறந்ததாக கூறப்படுகிறது. இவற்றில் அனைத்து சத்துக்களும் இருப்ப தோடு உடலுக்கு எவ்வித ஆபத்தையும் ஏற் படுத்தாது என்றும் கூறப்படு கிறது.

இத்தகைய சூரியகாந்தி பூக்கள் பயிரிடுவதில் மேல் மலையனூர் பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது முருகன் தாங்கல், செக்கடிக்குப்பம் ஆகிய கிராமங்களில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். மேல்மலையனூர் பகுதியில் மழை பெய்யாமல் பொய்த்துப் போன நிலையிலும், விவ சாயிகள் தங்களின் கிணற்றை தூர்வாரி விவசாயம் பொய்த் துப்போகாமல் இருக்க இதுபோன்ற பயிர்களை சாகுபடி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த சூரியகாந்தி பூக்கள் பூத்திருக்கும் நிலப்பகுதியை அவ்வழியாக வாகனங்களில் செல்வோர் நின்று கண் குளிர பார்த்துவிட்டு செல் கின்றனர்.

**கோடை சாகுபடி முனைப்பு இயக்கங்களில் விவசாயிகள் பங்கேற்று பயன்பெற வேண்டும் வேளாண்மை அதிகாரி வேண்டுகோள்**

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை மாவட் டத்தில் நடைபெறும் கோடை சாகுபடி முனைப்பு இயக்கங்களில் விவசாயிகள் பங்கேற்று பயன் பெற வேண்டும் என்று வேளாண்மை இணை இயக்குனர் கேட் டுக் கொண்டுள்ளார்.இது குறித்து புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதா வது;–

<u>கோடை சாகுபடி முனைப்பு இயக்கம்</u>

புதுக்கோட்டை மாவட் டத்தில் நடப்பாண்டு வட கிழக்குப் பருவமழை இயல் பான மழையளவை விடக் குறைவாக பெய்ததால் மானாவாரிக் குளங்கள் மூலம் பாசனம் செய்யும் நெல் சாகுபடிப் பரப்பு மிகவும் குறைந்துவிட்டது. மேலும் பருவத்தில் சரியான மழை கிடைக்கப்பெறாததால் சாகுபடி செய்யப்பட்ட நெற் பயிர்கள் பாதிப்புக்கு உள்ளாகி யுள்ளது.

எனவே, உணவு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நெல் அறுவடைக்குப் பிறகு இருப்பிலுள்ள தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் 3,100 எக்டரிலும், மக்காச்சோளம் 6,000 எக்டரிலும், பயறு வகைப் பயிர்கள் 8,900 எக்டரிலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யத் திட்டமிடப் பட்டு அதற்கானத் தொழில் நுட்பங் கள் மற்றும் வழிமுறைகள் குறித்து கோடை சாகுபடி முனைப்பு இயக்கங்கள் அனைத்து வேளாண் வட் டாரங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது.

<u>உற்பத்தியை அதிகப்படுத்த திட்டம்</u>

கோடையில் நெல் சாகுபடியை திருந்திய நெல் சாகுபடி முறையில் செய்வ தால் தண்ணீர்த் தேவை மிகவும் குறைகிறது. மேலும் இம்முறையில் கூடுதல் மக சூலும் கிடைக்க வாய்ப்புள் ளது. சாகுபடிச் செலவும் குறைகிறது. பயறு வகைப் பயிர்களைப் பொறுத்த வரை தோட்டக் கால் சாகுபடி முறையிலும் நஞ்சைத் தரிசில் உளுந்து மற்றும் பாசிப்பயறு சாகுபடியும், இதரப் பயிர்களில் ஊடுபயிராகவும், வரப்புப் பயிராகவும் சாகுபடி செய்து பயறு சாகுபடிப் பரப்பினை அதிகப்படுத்துவதோடு உணவு உற்பத்தியினையும் அதிகப்படுத்திட திட்டமிடப் பட்டு முனைப்பு இயக்கங்கள் நடைபெற்று வருகிறது.இம்முனைப்பு இயக்கங் களில் வேளாண்மைத் தொழில் நுட்பங்களையும் அரசு செயல்படுத்தும் வேளாண் திட்டங்களையும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

<u>விவசாயிகள் பங்கேற்க வேண்டும்</u>

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தங்கள் வட்டாரங்களில் நடக்கும் முனைப்பு இயக்கங்களில் கலந்து கொண்டு வேளாண் தொழில்நுட்பங்களையும், அரசின் திட்டங்களையும் தெரிந்து கொண்டு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தண்ணீரை மிகவும் சிக்கன மாகப் பயன்படுத்தி பயிர்ச் சாகுபடி மேற்கொண்டு சம்பா பருவத்தில் உணவு உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பை கோடையில் ஈடு செய்திட விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முனைப்பு இயக்கங்கள் நடைபெறும் விவரங்களைத் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

**தாண்டிக்குடியில் இருந்து காதலர் தினத்திற்காக வண்ணமலர்கள் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி**



**பெரும்பாறை,**

காதலர் தினத்திற்காக வண்ணமலர்கள் தாண்டிக்குடியில் இருந்து வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**<u>காதலர் தினம்</u>**

உலகம் முழுவதும் இன்று (வெள்ளிககிழமை) காதலர் தினம் கொண்டாடப்படுகிறது. இன்றைய தினம் வாழ்த்து அட்டைகள், பரிசு பொருட்கள், ரோஜா உள்ளிட்ட வண்ண மலர்களை கொண்டு காதலர்கள் தங்களது அன்பை வெளிப்படுத்துவது வழககம். இதில் பெண்களை அதிகம் கவர்வது மலர்கள் தான்.

எனவே எப்போதும் மலர்களுககு என்று தனி கிராககி இருககத்தான் செய்கிறது.திண்டுககல் மாவட்டம் கொடைகானல் வட்டம் தாண்டிககுடியில் தாண்டிபுளோரா என்ற பெயரில் கொய்மலர் விவசாயம் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் கார்னேஷன், ஜெர்புரா உள்ளிட்ட மலர்கள் சிறப்பு வாய்ந்தவை. பல்வேறு வண்ணங்களில் உள்ள இந்த மலர்கள் அனைவரின் கண்களையும் கொள்ளை கொள்ளும் அழகுடன் இருககின்றது.

**<u>வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி</u>**

காதலர் தினத்தை முன்னிட்டு தாண்டிககுடியில் இருந்து டெல்லி, பெங்களூர் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுககு கார்னேஷன், ஜெர்புரா மலர்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த சில நாட்களுககு முன்பு கார்னேஷன், ஜெர்புரா பூககள் விலை குறைந்து காணப்பட்டது. காதலர் தினத்தையொட்டி கார்னேஷன், ஜெர்புரா மலர்கள் 20 பூக்கள் கொண்ட ஒரு பஞ்சு ரூ.200 முதல் ரூ.250 வரை விலை உயர்ந்து விற்பனை செய்யப்படுகிறது. தற்போது இப்பகுதியில் மழை பெய்யாத காரணத்தாலும் அதிக பனி பொழிவதாலும் பூக்கள் மலர்வது குறைந்துள்ளது என்று தாண்டிககுடியில் உள்ள தாண்டிபுளோரா, கொய்மலர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழக நிதிநிலை அறிக்கை 2014-15: முக்கிய அம்சங்கள்



பாரம்பரிய நீர்நிலைகளைச் சீரமைப்பதற்காக 160 பணிகளை மேற்கொள்ள, ரூ.86.28 கோடி நிதி ஒதுக்கீடு.நபார்டு மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் கீழ் உள்ள நிதியைப் பயன்படுத்தி பல்வேறு பால் பண்ணைகளின் திறனை உயர்த்த ரூ. 198.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.1.5 லட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் வழங்க ரூ. 198.25 கோடி ஒதுக்கீடு.பயிர்க் காப்பீட்டிற்காக ரூ.242.54 கோடி நிதி ஒதுக்கீடு.தேசியத் தோட்டக்கலை இயக்கம் 22 மாவட்டங்களில் ரூ115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 323 கோடி ரூபாய் செலவில் பல்வேறு துணைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.12,000 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்படும்.தமிழகத்தில் உள்ள நதிகளை இணைக்க ரூ.119.98 கோடி நிதி ஒதுக்கீடு. அணைகள் புனரமைப்புக்கு ரூ.329.65 கோடி நிதி ஒதுக்கீடு. மீன்பிடி தடைக்காலங்களில் மீனவர்களின் நிவாரணத்திற்காக வழங்க ரூ.105 கோடி ஒதுக்கீடு. பூம்புகாரில் புதிய மீன்பிடி துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது.

வேளாண் வளர்ச்சி திட்டங்கள்: வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்துக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு. திருத்திய நெல் சாகுபடி முறை 3 லட்சம் ஏக்கருக்கு விரிவுப்படுத்தப்படும்.

## இன்று காதலர் தினம்: 3 கோடி ரோஜாக்கள் ஏற்றுமதி



காதலர் தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரிலிருந்து வெளிநாடுகளுக்கு 3 கோடி ரோஜாக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், பேரிகை, பாகலூர், தளி, தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் நிலவும் தட்வெப்பநிலை மலர்கள் சாகுபடிக்கு ஏற்ற வகையில் உள்ளது. இங்கு 500 ஹெக்டேர் பரப்பளவில் ரோஜா சாகுபடி செய்யப்படுகிறது.

இங்கிருந்து பெருநகரங்களுக்கு மட்டுமின்றி, பிரான்ஸ், சிங்கப்பூர், மலேசியா, நியூசிலாந்து மற்றும் அரேபிய நாடு களுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகிறது. இந்த ஆண்டு சீனாவில் ரோஜா சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதால், ஓசூர் ரோஜாவுக்கு வரவேற்பு உள்ளதாக விவ சாயிகள் தெரிவித்தனர். குறிப்பாக தாஜ்மஹால், ரெட் ஜயன்ட், கஞ்ஜன் ஜங்கா, ரெட் ரோஸ், மிக்ரா, சிவப்பு ரோஜா ஆகிய ரகங் களுக்கு அதிக வரவேற்பு காணப்படுகிறது.